19.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சென்னை துறைமுகத்தில் மீண்டும் ஆப்பிள் இறக்குமதி?

'மும்பையைத் தவிர, வேறு எங்கும் ஆப்பிள் இறக்குமதி செய்யக்கூடாது' என, உத்தரவிட்ட நிலையில், 'சென்னை துறைமுகத்தில், மீண்டும் ஆப்பிள் இறக்குமதியை அனுமதிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்' என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.கட்டுப்பாடு:உள்நாட்டு தேவையை பூர்த்தி செய்ய, அமெரிக்கா, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா மற்றும் சீனா போன்ற நாடுகளில் இருந்து, ஆப்பிள் இறக்குமதி செய்யப்படுகிறது. இதுவரை, நாட்டில் உள்ள அனைத்து துறைமுகங்கள் வழியாகவும் இறக்குமதி நடந்தது.

இந்நிலையில், 'மும்பை துறைமுகம் வழியாக மட்டுமே, ஆப்பிள் இறக்குமதி செய்ய வேண்டும்; மற்ற துறைமுகங்கள் வழியாக இறக்குமதி செய்யக்கூடாது' என, மத்திய அரசின் வெளிநாட்டு வர்த்தக இயக்குனரகம், 14ம் தேதி முதல், கட்டுப்பாடு விதித்தது.இரும்புத்தாது மற்றும் நிலக்கரியை கையாளும் பணி கைவிட்டுப் போனதால், நஷ்டத்தில் இருந்து மீள முடியாமல், தள்ளாடி வரும் சென்னை துறைமுகத்திற்கு, இப்புதிய உத்தரவு மேலும் சிக்கலை ஏற்படுத்தியது.

அதனால், தமிழ் வர்த்தக சபை தலைவர் சோழநாச்சியார் ராஜசேகர் மற்றும் ஆப்பிள் இறக்குமதியாளர்கள் சங்கத்தினர், டில்லி சென்று, வர்த்தக இணை அமைச்சர் நிர்மலா சீதாராமனைச் சந்தித்து பேசினர்.பிரத்யேக வசதி:இது குறித்து, சோழநாச்சியார் ராஜசேகர் கூறியதாவது:சென்னை துறைமுகத்தின் இரு முனையங்களிலும், ஆப்பிள்

இறக்குமதிக்கான, உணவு பாதுகாப்பு தர நிர்ணய அனுமதி மற்றும் பூச்சித் தொற்று தடுப்புக்கான பிரத்யேக வசதிகள் உள்ளன. ஆண்டுக்கு, 1,200 கோடி ரூபாய் வர்த்தகம் நடப்பதால், ஆப்பிள் இறக்குமதிக்கான தடையில் இருந்து, விலக்கு அளிக்க வேண்டும் என, அமைச்சர் நிர்மலா சீதாராமனிடம் வலியுறுத்தினோம்.

துறை அதிகாரிகளை அழைத்து ஆலோசித்தார். பின், 'உங்கள் கோரிக்கை குறித்து பரிசீலித்து, உரிய உத்தரவுகள் வழங்கப்படும்' என்றார். சென்னை துறைமுகத்தில், மீண்டும் ஆப்பிள் இறக்குமதிக்கான அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**குற்றால அருவிகளில் வெள்ளப்பெருக்கு வடகிழக்கு பருவமழை துவங்கியது**



திருநெல்வேலி:திருநெல்வேலி மாவட்டம் முழுவதும் நேற்று பரவலாக மழை பெய்தது. குற்றால அருவிகளில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது.ஆண்டுதோறும் ஐப்பசி,

கார்த்திகை மாதங்களில் வடகிழக்கு பருவமழை பெய்யும். நேற்று ஐப்பசி முதல் நாளில் தென் மாவட்டங்களில் மழை துவங்கியது.

நெல்லை மாவட்டம், மேற்குதொடர்ச்சி மலைப்பகுதியில் கனமழை பெய்தது.குற்றாலத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு 2 மணிக்கு கடும்மழை துவங்கியது. நேற்று காலை 5 மணிக்கு, அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

மெயின்அருவியில் காலையில் இருந்தே சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. நேற்று மாலை வரை வெள்ளப்பெருக்கு நீடித்தது. ஐந்தருவி, பழைய குற்றாலத்திலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

## 79 மணி 24 நிமிடத்தில் 1,040 கி.மீ., கடந்த புறா

ராமநாதபுரம்:ஆந்திர மாநிலம் கரீம் நகரில் இருந்து ராமநாதபுரம் வரை 1,040 கி.மீ.,யை 79 மணி 24 நிமிடத்தில் கடந்து வந்த புறாவுக்கு கலாம் நினைவு கோப்பை வழங்கப்பட்டது.

ராமநாதபுரம் புறா சங்கம் சங்கம் சார்பில் 11 வது புறா பந்தயம் 5 கட்டங்களாக நடந்தது. விழுப்புரத்தில் இருந்து ராமநாதபுரம் வரை 290 கி.மீ.,யை 3 மணி 51 நிமிடத்தில் கடந்த ராமநாதபுரத்தை சேர்ந்த ஹிமான் என்பவரது புறா முதலிடம் பிடித்தது.

மற்ற 4 கட்ட போட்டிகளிலும் ராமநாதபுரத்தை சேர்ந்த அப்துல் சுக்கூர் என்பவரின் புறக்களே முதலிடத்தை பெற்றன. அந்த புறாக்கள் தாம்பரத்தில் இருந்து ராமநாதபுரம் வரை 420 கி.மீ.,யை 5 மணி 44 நிமிடத்திலும், ஆந்திர மாநிலம் கூடூரில் இருந்து ராமநாதபுரம் வரை 540 கி.மீ.,யை 8 மணி 16 நிமிடத்திலும், ஆந்திரா ஓங்கோலில் இருந்து ராமநாதபுரம் 700 கி.மீ.,யை 14 மணி 42 நிமிடத்திலும் ஆந்திரா கரீம்நகரில் இருந்து ராமநாதபுரம் வரை 1,040 கி.மீ.,யை 79 மணி 24

நிமிடத்திலும் கடந்தன. ஒட்டுமொத்த போட்டிகளில் 64 புள்ளிகள் எடுத்த அப்துல் சுக்கூரின் புறாக்களுக்கு அப்துல்கலாம் நினைவு சாம்பியன் கோப்பை வழங்கப்பட்டது. 26 புள்ளிகள் எடுத்த ராமநாதபுரம் சதீஷின் புறாக்களுக்கு 2 ம் இடம், 10 புள்ளிகள் எடுத்த சிவாஜியின் புறாக்கள் 3 ம் இடம் கிடைத்தது.

## ராமநாதபுரத்தில் கர்நாடக இலந்தை

ராமநாதபுரம்:கர்நாடக வனப்பகுதியில் அதிகளவு காட்டு இலந்தை விளைகிறது. தற்போது சீசன் துவங்கியுள்ளதால் ராமநாதபுரத்தில் விற்பனைக்கு வந்துள்ளன.

இவை நாட்டு இலந்தையை விட பெரிதாக இருக்கும். சிவப்பு நிறத்தில் இனிப்பு, புளிப்பு கலந்திருக்கும். ஏ, பி, சி, வைட்டமின்கள், சுண்ணாம்பு, இரும்பு சத்து இருக்கும். செரிமானத்திற்கும், எலும்பு, பல் வளர்ச்சிக்கும் சிறந்தது. ஒரு கிலோ ரூ.20 க்கு விற்கப்படுகிறது. கிலோவிற்கு 15 முதல் 20 பழங்கள் உள்ளன.

வியாபாரி ஆனந்த் கூறுகையில், “கர்நாடக இலந்தை பழம் அக்டோபர் முதல் ஜனவரி வரை கிடைக்கும். இதில் சதைப்பற்று அதிகமாக இருக்கும். நாங்கள் தினமும் 150 கிலோ விற்பனை செய்கிறோம்,” என்றார்.

## தென் மாவட்டங்களில் இன்று மழைக்கு வாய்ப்பு

சென்னை : கன்னியாகுமரி அருகே மேலடுக்கில் ஏற்பட்ட சுழற்சியால் தென் மாவட்டங்களில் இன்று(19-10-15) சில இடங்களில் மழை பெய்யும். ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு உள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மரக்கன்றுகள் நடும் விழா

புதுச்சேரி: அப்துல்கலாம் பிறந்த நாளையொட்டி, பிம்ஸ் மருத்துவமனை செவிலியர் கல்லுாரியில் மரக்கன்றுகள் நடப்பட்டன.

செவிலியர் கல்லூரி என்.எஸ்.எஸ்., சார்பில் நடந்த நிகழ்ச்சியில் மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் படத்திற்கு அஞ்சலி செலுத்தினர். கல்லூரி வளாகத்தில் மரக் கன்றுகள் நடப்பட்டன. செவிலியர் கல்லூரி மாணவிகளின் சமுதாய நாடகம், தூய்மை இந்தியா குறித்த விழிப்புணர்வு புகைப்பட கண்காட்சி போட்டிகள் நடத்தப்பட்டன. ஏற்பாடுகளை செவிலியர் கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள் செய்திருந்தனர்.

## தக்காளி விவசாயிகளுக்கு பயன்படாத குளிர்பதன கிடங்கு

மேட்டூர் : மேச்சேரியில் கடந்த, ஐந்து ஆண்டுகளாக செயல்படும் அரசு குளிர்பதன கிடங்கு, காய்கறி இருப்பு வைக்க பயன்படாமல், வியாபாரிகளுக்கு மட்டுமே உபயோகப்படுவது, விவசாயிகளை வேதனையில் ஆழ்த்தியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் அதிபட்சமாக, மேச்சேரி சுற்றுப்பகுதியில்தான் ஆண்டுக்கு, 2,320 ெஹக்டேரில் தக்காளி சாகுபடி செய்யப்படும். இதன் மூலம், 30 ஆயிரம் டன் தக்காளி அறுவடையாகும். தக்காளி அறுவடை சமயத்தில் விலை வீழ்ச்சியடைவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது. தக்காளியை இருப்பு வைத்து, பற்றாக்குறை சமயத்தில் விற்பனை செய்வதற்காக மேச்சேரியில் குளிர்பதன கிடங்கு அமைக்க வேண்டும் என, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.கடந்த, 2011ல் மேச்சேரி அடுத்த சாம்ராஜ்பேட்டையில், வேளாண் விற்பனை குழு சார்பில், 100 டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதன கிடங்கு கட்டப்பட்டது. ஆனால், குளிர்பதன கிடங்கு பயன்பாட்டுக்கு வந்த நாள் முதல், இன்று வரை, விவசாயிகளை விட, வியாபாரிகளுக்கே உபயோகப்படுகிறது.

தக்காளியை வெகுநாளுக்கு இருப்பு வைக்க முடியாது. அப்படியே இருப்பு வைத்தாலும் ஒரு வாரத்தில், அதிகபட்சமாக, 2 முதல், 5 ரூபாய் வரை, மட்டுமே விலை உயரும். ஆனால், அந்த தக்காளியை விவசாய நிலத்தில்

இருந்து குளிர்சாதன கிடங்குக்கு ஏற்றி செல்வதற்காக வாகன வாடகை, ஏற்று கூலி, கிடங்கு வாடகை ஆகியவற்றை கணக்கிடும்பட்சத்தில் நஷ்டமே ஏற்படும் என்பதால், தக்காளியை இருப்பு வைப்பதில்லை.இதனால், பயன்பாட்டுக்கு வந்த நாள் முதல் இதுவரை கிடங்கில் தக்காளி, வெண்டை, கத்திரி உள்ளிட்ட காய்கறிகளை விட, ஆப்பிள், ஆரஞ்சு, திராட்சை உள்ளிட்ட பழ வகைகளை வியாபாரிகள் மட்டுமே இருப்பு வைக்கின்றனர். காய்கறிகளை இருப்பு வைப்பதற்காக கட்டப்பட்ட குளிர்பதன கிடங்கு, வியாபாரிகளுக்கு மட்டுமே உபயோகப்படுவது மேச்சேரி பகுதி தக்காளி மற்றும் இதர காய்கறி சாகுபடி விவசாயிகளை அதிருப்தியில் ஆழ்த்தியுள்ளது.

**பசுமை வீடுகளுக்கு முதற்கட்ட நிதி வழங்கல்**

குமாரபாளையம் : குப்பாண்டபாளையம் ஊராட்சியில், 14 பசுமை வீடு பயனாளிகளுக்கு, முதற்கட்ட நிதி உதவி வழங்கப்பட்டது.

குமாரபாளையம் அடுத்த, குப்பாண்டபாளையம் ஊராட்சி பகுதியில், எம்.ஜி.ஆர்., நகர், கோட்டைமேடு, ஆலாங்காட்டுவலசு, சானார்பாளையம், குப்பாண்டபாளையம் உள்ளிட்ட பகுதிகளில், நடப்பு ஆண்டுக்கு, 14 பசுமை வீடுகள் கட்ட, அனுமதி வழங்கப்பட்டது. இதன் அடிப்படையில், தமிழக அரசு சார்பில் பசுமை வீடுகளுக்கு வழங்கப்பட வேண்டிய மொத்த தொகை, இரண்டு லட்சத்து, 80 ஆயிரம் ரூபாயில், தற்போது முதற்கட்ட நிதி உதவியாக, ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது. மீதி தொகையாக, ஒரு லட்சம் ரூபாய் வீடு கட்டுமான பணிகள் முழுமையாக முடிவடைந்ததும் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. நிதி வழங்கும் நிகழ்ச்சியில், ஊராட்சி மன்ற தலைவர் சின்னுசாமி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**கரும்பு டன்னுக்கு ரூ.4,000 கொள்முதல் விலை; அரசு கூடுதல் விலை அறிவிக்க கோரிக்கை**

நாமக்கல் : 'கரும்பு டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் கொள்முதல் விலை கிடைக்கும் வகையில், மாநில அரசின் கூடுதல் விலைக்கான அறிவிப்பை வெளியிட வேண்டும்' என, மாநிலக்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாநிலக்குழுக் கூட்டம் நாமக்கல்லில் நேற்று நடந்தது. மாநிலத் தலைவர் எம்.எல்.ஏ., பாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பின் அடிப்படையில், தமிழகத்திற்கு மாத வாரியாக தண்ணீர் வழங்க கர்நாடக மாநில அரசு தொடர்ந்து மறுத்து வருகிறது. கர்நாடகா அரசு ஜூன் முதல், செப்டம்பர் இறுதி வரை மட்டும், 45 டி.எம்.சி., தண்ணீர் தமிழகத்திற்கு பாக்கி தர வேண்டி உள்ளது. மத்திய அரசு, கர்நாடகாவிடம் இருந்து பாக்கி தண்ணீரை பெற்றுத்தரவும், காவிரி நதி நீர் மேலாண் வாரியம், காவிரி கண்காணிப்புக்குழு ஆகியவற்றை அமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில், அக்டோபர், 1ம் தேதி முதல் கரும்பு அரவை பருவம் துவங்கி, பல்வேறு ஆலைகளில் உற்பத்தி துவங்கியுள்ளது. தமிழக அரசு நடப்புஆண்டு கரும்புக்கான கூடுதல் விலையை இதுவரை அறிவிக்காதது சரியல்ல. எனவே, கரும்பு டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் விலை கிடைக்கும் வகையில், மாநில அரசின் கூடுதல் விலைக்கான அறிவிப்பை உடனடியாக வெளியிட வேண்டும்.மேலும், கரும்பு விவசாயிகளுக்கு தனியார் சர்க்கரை ஆலைகள் தர வேண்டிய, 1,000 கோடி ரூபாய் பாக்கியை பெற்றுத்தர, நேரடியாக தலையிட வேண்டும். நாடு முழுவதும் பருப்பு விலை வரலாறு காணாத வகையில் உயர்ந்துள்ளது. அதற்கு பெரும் வர்த்தகர்களின் பதுக்கலும், ஆன்லைன் வர்த்தகமே காரணம். மத்திய, மாநில அரசுகள், பதுக்கலை தடுத்து வெளிக்கொண்டு வருவதுடன், மக்களின் தேவைக்கேற்ப பருப்பை வெளிநாடுகளில் இருந்து அரசே இறக்குமதி செய்ய வேண்டும்.

கரும்பு டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்ய வேண்டும்; கரும்பு பாக்கியை உடனடியாக வழங்க வேண்டும் எனக்கோரி, தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்கம், வரும், டிசம்பர், 15ம் தேதி முற்றுகை போராட்டம் நடத்தப்படும் என்பது உள்பட, பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

## பழ நாற்றுக்களை பாதுகாப்புடன் வளர்க்க ஆதிவாசிகளுக்கு அறிவுரை

பந்தலுார்: பந்தலுார் அருகே கையுன்னியில் பழங்குடியின மக்களுக்கு, 7000 பழக்கன்று வழங்கப்பட்டது.நீலகிரி ஆதிவாசிகள் நலச்சங்கம் சார்பில் கையுன்னி பனியர் மறுவாழ்வு மைய வளாகத்தில் நடந்த நிகழ்ச்சியில், ஒருங்கிணைப்பாளர் நீலகண்டன் வரவேற்றார். வனச்சரகர் மனோகரன் தலைமை வகித்து பழங்குடியின மக்களுக்கு மரக்கன்றுகளை வழங்கினார்.கூடலுார் ஊராட்சி ஒன்றிய துணை தலைவர் வர்கீஸ் பேசுகையில்,“வனத்தோடு ஒன்றி வாழும் தன்மை கொண்ட பழங்குடியினர் வனத்தை பாதுகாப்பதில் முனைப்பு காட்டுகின்றனர். அவர்களின் வீடுகளை சுற்றிலும் தற்போது வழங்கப்பட்டுள்ள பழக்கன்றுகளை நட்டு பராமரித்து வளர்க்க வேண்டும். இதனை விற்பனை செய்வதற்கு முக்கியத்துவம் அளிக்காமல், குழந்தைகளுக்கு வழங்க வேண்டும்,” என்றார். லிச்சி, கொடம்புளி, ஒட்டுபலா, ஆரஞ்சு, முட்டைப்பழம், பாக்கு, ரம்பூட்டான் உள்ளிட்ட பல்வகையை சேர்ந்த, 7,000 பழக்கன்றுகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் ஆதிவாசி வெளுத்தா, புருஷோத்தமன், மருந்தாளுனர் ராஜேந்திரன் உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் பங்கேற்றனர். பணியாளர் சாந்தி நன்றி கூறினார்.

## தேனி மாவட்டத்தில் பூக்கள் விலை உயர்வு

தேனி:ஆயுதபூஜை, சரஸ்வதி பூஜை கொண்டாட்டத்தினை யொட்டி பூக்களின் விலை உயர்ந்துள்ளது.தேனி மாவட்டத்தில் பூக்கள் சாகுபடி பரப்பு மிக குறைவாக உள்ளது. தேவைக்கான பூக்களை மதுரை மார்கெட்டில் இருந்து தினமும் பெற்று வருகின்றனர். 21,22ம்தேதிகளில்

ஆயுத பூஜை, சரஸ்வதி பூஜை கொண்டாடப்பட உள்ளது. இவ் விழாவில் வீடு மற்றும் வணிக நிறுவனங்கள் தோறும் சாமிக்கு பூ, பழங்கள் படைத்து வழிபடுவார்கள். இதனால் தேனி மாவட்டத்தில் பூக்கள் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.கடந்த வாரம் கிலோ ரூ.200க்கு விற்ற மல்லிகை நேற்று ரூ.300ஆக உயர்ந்தது. ரூ.150க்கு விற்ற பிச்சி பூ ரூ.200ஆகவும், ரூ.200க்கு விற்ற கனகாம்பரம் ரூ.400 ஆக உயர்ந்தது. ரூ.70க்கு விற்ற செவ்வந்தி பூ ரூ.250 ஆக உயர்ந்துள்ளது. கடந்த சில நாட்களுக்கு முன் மாவட்டத்தில் பெய்த மழையால் செவ்வந்திபூ சாகுபடி பாதிக்கப்பட்டது. அதனால் விலை குறைவானது. தற்போது இதன் விலையும் கிலோவிற்கு ரூ.180க்கு உயர்ந்துள்ளது.

கடந்த வாரம் பெய்த மழை மல்லிகை சாகுபடிக்கு உகந்ததாக இருந்தது. இதனால் தற்போது மல்லிகை பூ வரத்து அதிகரித்து உள்ளது. வரத்து அதிகமானதால் விலை கட்டுக்குள் வந்து கிலோ ரூ.300 ஆக உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டு இதே நாளில் ஒரு கிலோ ரூ.800 முதல் ரூ.ஆயிரமாக உயர்ந்து இருந்தது. மழை பெய்து மல்லிகை விளைச்சல் அதிகரித்தால் விலை அதிகமாக உயரவில்லை. ஐப்பசி மாதத்தில் திருமண முகூர்த்தம் நாட்கள் இருப்பதால் பூக்கள் விலை இனி உயரும் என தேனி பூ வியாபாரி செந்தில்குமார் தெரிவித்தார்.

## 250 ரூபாயை எட்டிய நிலையில் அரசு அதிரடி : பருப்பு பதுக்கலுக்கு தடை



புதுடெல்லி : பருப்பு வகைகள் விலை உச்சத்துக்கு சென்றுள்ள நிலையில், பதுக்கலை தடுக்க பருப்பு வகைகளை இருப்பு வைக்க கட்டுப்பாடு விதித்து மத்திய அரசு நேற்று உத்தரவு பிறப்பித்துள்ளது. பருப்பு வகைகள் விலை வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே பருப்பு உற்பத்தி குறைந்து வந்தது. பருவமழை போதுமான அளவு பெய்யாததால் பருப்பு வகைகள் உற்பத்தி கடந்த 2014-15ல் 17.2 மில்லியன் டன்னாக இருந்தது. இது முந்தைய ஆண்டை விட 2 மில்லியன் டன் குறைவாகும். இருப்பினும் விலை உயர்வுக்கு பதுக்கலும் முக்கிய காரணமாக உள்ளது. இந்த ஆண்டில் வெங்காயத்தை அடுத்து அதிக விலை உயர்வை சந்தித்தது பருப்புதான். துவரம் பருப்பு ஒரு கிலோ ரூ.250 எட்டியுள்ளது. உளுத்தம் பருப்பு கிலோ ரூ.190 வரை

சென்றுள்ளது. தீபாவளி பண்டிகை நெருங்கி வரும் நிலையில் பருப்பு விலை உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என்று பொதுமக்கள் உட்பட பல தரப்புகளில் இருந்தும் கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன.

இந்நிலையில், பருப்பு வகைகளை இருப்பு வைக்க கட்டுப்பாடு விதித்து மத்திய அரசு நேற்று உத்தரவு பிறப்பித்தது. இதுகுறித்து மத்திய அரசின் உணவு பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: சந்தைக்கு பருப்பு வகைகள் வரத்தை அதிகரிக்கவும், பதுக்கலை தடுக்கவும் அத்தியாவசிய பொருட்கள் சட்டம் 1955ன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி பருப்பு வகைகளை இறக்குமதியாளர்கள், ஏற்றுமதியாளர்கள், அங்கீகாரம் பெற்ற உணவு பதனீட்டாளர்கள், பெரிய டிபார்மெண்டல் ஸ்டோர் வைத்திருப்பவர்கள் இருப்பு வைப்பதற்கு கட்டுப்பாடு விதித்து உடனடியாக அமல்படுத்தப்படுகிறது. அதாவது, இறக்குமதியாளர் உள்ளிட்ட மேற்கண்ட நான்கு வகையினருக்கும் இருப்பு வைப்பதற்கு உள்ள விதிவிலக்கு நீக்கப்பட்டுள்ளது. சந்தையில் தினமும் நிலவும் விலை விவரங்களை கேபினட் செயலாளர் ஆய்வு செய்வார். இவர், அத்தியாவசிய பொருட்களின் விலையை, குறிப்பாக பருப்பு வகைகளின் விலையில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாக கண்காணிப்பு செய்வதற்கு அனைத்து துறைகளுக்கும் உத்தரவு பிறப்பித்துள்ளார். அனைத்து மாநிலங்களுடனும் இணைந்து இந்த கண்காணிப்பு மேற்கொள்ளப்படும்.

அதுமட்டுமின்றி, அனைத்து மாநிலங்களும் பதுக்கலுக்கு எதிரான நடவடிக்கைகளை எடுத்து சந்தையில் போதுமான இருப்பு உள்ளதை உறுதிப்படுத்தவும், கள்ளச்சந்தையில் அதிக விலைக்கு விற்பதை தடுக்கவும் அதிரடி நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உள்நாட்டு சந்தையில் தட்டுப்பாட்டை போக்க, மத்திய அரசு நிறுவனமான இந்திய உலோகம்

மற்றும் கனிம வர்த்தக நிறுவனம் 5,000 டன் துவரம் பருப்பு இறக்குமதியை செய்துள்ளது. இன்னும் 2,000 டன் துவரம்பருப்பு இறக்குமதிக்கு டெண்டர் விரைவில் இறுதி செய்யப்படும் என மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதுதவிர மத்திய அரசு விவசாயிகளிடம் இருந்து சந்தை விலையில் 30,000 டன் துவரம் பருப்பு, 10,000 டன் உளுத்தம் பருப்பு சந்தை விலையில் வாங்குவதற்கு மத்திய அரசு முடிவு எடுத்துள்ளது. அடுத்த மாதத்தில் இருந்து தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை இணையம் பருப்பு வகைகளை கொள்முதல் செய்ய துவங்க உள்ளன.


**குற்றாலம் அருவிகளில் வெள்ளப்பெருக்கு**




தென்காசி: மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் நேற்று மழை கொட்டியது. இதனால் குற்றாலம் அருவிகளில் அதிகாலை 5 மணிக்கு மேல் தண்ணீர் வரத்து அதிகரித்தது. மெயினருவியில் பாதுகாப்பு வளைவை தாண்டி பெண்கள் பகுதிக்கு செல்லும் பாலத்தை தொட்டவாறு தடாகத்தில் தண்ணீர் விழுந்தது. ஐந்தருவியில் ஐந்து பிரிவுகளிலும் தண்ணீர் ஆக்ரோஷமாக கொட்டியது. பழைய குற்றாலத்தில் அதிகாலை வேளையில் படிக்கட்டுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. புலியருவி, சிற்றருவி, செண்பகாதேவி அருவியிலும் தண்ணீர் அதிகம் விழுந்தது. அனைத்து அருவிகளிலும்

வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் பாதுகாப்பு கருதி சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டது. இதனால் வெளியூர்களிலிருந்து வந்திருந்த சுற்றுலா பயணிகளும், ஐப்பசி மாதப்பிறப்பை முன்னிட்டு சபரிமலைக்கு செல்லும் வழியில் குற்றாலம் வந்த ஐயப்ப பக்தர்களும் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

**தமிழகத்தில் திருவள்ளூர் உட்பட 8 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைவு**




சென்னை : தமிழகத்தில் திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் உட்பட 8 மாவட்டங்களில் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து இருப்பதாக நீர்வள ஆதார விவர குறிப்பு மையத்தின் ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது. தமிழகத்தில் நிலத்தடி நீர்மட்டம் குறித்து, மாநில நில மற்றும் நீர்வள ஆதார விவர குறிப்பு மையம் ஒவ்வொரு மாதமும் ஆய்வு மேற்கொண்டு வருகிறது. இதற்காக அமைக்கப்பட்டுள்ள 3,280 பகுதிகளில் உள்ள திறந்தவெளி கிணறுகள் மற்றும் 1,559 ஆழ்துளை கிணறுகள் மூலம் நிலத்தடி நீர்மட்டம் ஆய்வு நடத்தப்படுகிறது. அதன்படி, கடந்த மாதம் நீர்வள ஆதார விவர குறிப்பு மையம் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் கடந்த 2014 செப்டம்பர் மாதத்தை ஒப்பிடுகையில் தமிழகத்தில் சென்னை, நாகப்பட்டினம், திருச்சி, அரியலூர் திருவண்ணாமலை, தர்மபுரி, கடலூர், தஞ்சாவூர், திருவாரூர், கரூர், பெரம்பலூர், சேலம், நாமக்கல், ஈரோடு, கோவை, திருப்பூர், திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, தேனி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர் ஆகிய 24 மாவட்டங்களில் நிலத்தடி நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

ஆனால், திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், கிருஷ்ணகிரி, விழுப்புரம், புதுக்ோகாட்ைட, கன்னியாகுமரி , நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களில் கடந்த ஆண்டு செப்டம்பர் மாதத்தை ஒப்பிடுகையில் குறைந்துள்ளது. குளங்கள் சீரமைப்பு அம்போ...

நீர்வளத்துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: தமிழகத்தில் தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவுக்கு இல்லாததும், அதிகப்படியான நிலத்தடி நீர் எடுக்கப்பட்டதன் காரணமாக நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்தது. இந்நிலையில், அக்டோபர் 20க்கு பிறகு தொடங்கவுள்ள வடகிழக்கு பருவமழை இந்தாண்டு கூடுதலாக பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஆனால், அந்த மழை நீரை சேகரிக்க முறையான கட்டமைப்பு வசதிகள் இல்லை. குறிப்பாக, தமிழகத்தில் 39 ஆயிரம் குளங்கள் உள்ள நிலையில், அவற்றில் 4 ஆயிரத்து 200 குளங்கள் மட்டுமே சீரமைக்கப்பட்டுள்ளன. மற்றவைகள் தூர்வாரப்படவில்லை. இதனால், நீர் சேகரித்து வைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால், தமிழகம் முழுவதும் நிலத்தடி நீர்மட்டம் ஒவ்வொரு ஆண்டும் குறைந்து கொண்டே வருகிறது. தொடர்ந்து இதே நிலை நீடித்தால் வருங்காலத்தில் நிலத்தடி நீர் மட்டம் அதல பாதாளத்திற்கு சென்று விடும். இவ்வாறு அவர் கூறினார்.

**புரட்டாசி முடிந்ததால் மீன்கள் வாங்க மக்கள் ஆர்வம் : விலையும் இரண்டு மடங்கு அதிகரிப்பு**



சென்னை : புரட்டாசி மாதம் முடிந்ததால் காசி மேடு மீன்பிடி துறைமுகத்தில் மீன்கள் வாங்க மக்கள் கூட்டம் அலை மோதியது. மீன்களின் விலை இரண்டு மடங்கு இருந்த போதிலும் மக்கள் போட்டி போட்டு வாங்கினர். சென்னை காசிமேடு என்றாலே தரமான மீன்கள் இங்கு கிடைக்கும் என்பது தான் மக்களுக்கு ஞாபகம் வரும். தினந்தோறும் ஆழ்கடல் பகுதியில் மீன் பிடித்து கொண்டு வரப்படும் விதவிதமான புதிய மீன்களை வாங்க வடசென்னை பகுதி மக்கள் மட்டும் அல்லாமல் சென்னையின் பல்வேறு பகுதியில் உள்ள பொதுமக்களும் இங்கு படை எடுப்பார்கள். இதனால் காசி மேடு மீன்பிடி துறைமுகம் வழக்கமான நாட்களை விட ஞாயிற்று கிழமைகளில் எப்போதும் களை கட்டும். ஆனால் கடந்த ஒரு மாதமாக புரட்டாசி என்பதால் பொதுமக்களில் பெரும்பாலானோர் அசைவ உணவை தவிர்ப்பார்கள். இதனால் கடந்த ஒரு மாதமாக காசி மேடு மீன் பிடி துறைமுகத்தில் உள்ள மீன் விற்பனை மையம் வெறுச்சோடி காணப்பட்டது. மீன்களும் வழக்கத்தை விட விலை சரிந்தே விற்பனையானது.இந்நிலையில் புரட்டாசி முடிந்து நேற்று ஐப்பசி பிறந்தது. அதிலும் முதல் நாளே ஞாயிற்றுக்கிழமை என்பதால் புரட்டாசிக்கு விடை கொடுத்த மக்கள் தங்களது விரதங்களுக்கும் விடை கொடுத்து அதிகாலையிலேயே மீன்களை வாங்க காசி மேடு மீன்பிடி துறைமுகத்திற்கு திரண்டனர்.இதனால் வழக்கத்தை விட 2 மடங்கு கூட்டம் காசி மேடு மீன்விற்பனை மையத்தில் கூடியது. மீன்களை பொதுமக்கள் போட்டி போட்டுக் கொண்டு வாங்கியதால் மீன்விலையும் முதல்நாளே இரட்டிப்பாக எகிறியது. இப்படி அனைத்து வகை மீன்கள் மற்றும் இறால், நண்டு உள்ளிட்டவைகளும் நல்ல விலை போயின. இதனால் மீன்களும் விரைவிலேயே விற்று தீர்ந்தன. இதனால் மீனவர்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர். இது குறித்து இந்திய மீனவர் சங்க தலைவர் தயாளன் கூறும்போது, 'கடந்த ஒரு மாதமாக மீனவர்கள் பிடித்து வரும் மீன்களுக்கு மவுசு இல்லாமல் இருந்தது. தற்போது புரட்டாசி முடிந்துள்ளதால் மீன்கள் நல்ல விலைக்கு விற்பனை ஆவதால்

மீனவர்களாகிய நாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

**புரட்டாசி முடிந்ததால் கறிக்கோழி ஒரே நாளில் கிலோவுக்கு ரூ. 15 உயர்வு**




கோவை: புரட்டாசி மாதம் முடிவடைந்ததை தொடர்ந்து நேற்று முதல் இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் நேற்று ஒரே நாளில் கறிக்கோழி இறைச்சி கிலோவிற்கு ரூ. 15 உயர்ந்தது. தமிழகத்தில் நேற்று முன்தினம் வரை நிலவிய புரட்டாசி மாதத்தில் ஆடு,மீன், கறிக்கோழி இறைச்சி நுகர்வு 15 சதவீதம் குறைந்தது. இதனால் ஆட்டிறைச்சி, மீன் ஆகியவற்றின் விலை குைறயவில்லை. ஆனால், கறிக்கோழி விலை வெகுவாக குறைந்தது. கடந்த ஒரு மாதமாக கறிக்கோழி பண்ணை கொள்முதல் மொத்த விலை உயிருடன் கிலோ ரூ. 55 முதல் ரூ. 65 வரை நிலவியது. சில்லரை விற்பனையில் இறைச்சி விலை கிலோ ரூ. 110 முதல் ரூ. 125 வரை நிலவியது. நேற்று முன்தினம் புரட்டாசி மாதம் முடிந்ததால், நேற்று முதல் இறைச்சி நுகர்வு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. குறிப்பாக கறிக்கோழி நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால் கறிக்கோழி நிர்ணய விலை உயர்ந்துள்ளது. நேற்று கறிக்கோழி பண்ணை கொள்முதல் மொத்த விலை உயிருடன் கிலோ ரூ. 65

ஆகவும், சில்லரை விற்பனையில் இறைச்சி விலை கிலோ ரூ. 125 ஆகவும் உயர்ந்தது. நேற்று முன்தினம் விலையுடன் ஒப்பிடுகையில் நேற்று ஒரே நாளில் இறைச்சி விலை கிலோவிற்கு ரூ. 15 உயர்ந்துள்ளது.உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் கூறுகையில், கறிக்கோழி நுகர்வு தொடர்ந்து அதிகரிக்கும் வாய்ப்புள்ளதால், கறிக்கோழி விலை மேலும் உயரும்' என்றனர்.

**மழை பெய்தாலும் ஏரிகள் நிரம்புவது கேள்விக்குறி சீமை கருவேல மரங்களை முழுமையாக அழிக்க வேண்டும் குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தல்**

திருவண்ணாமலை, : திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஏரிகளின் நீராதாராத்தை வீணாக்கும் சீமை கருவேல மரங்களை, முழுமையாக அழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என குறைதீர்வு கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர். திருவண்ணாமலை கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர்வு கூட்டம் நேற்று கலெக்டர் ஞானசேகரன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், வேளாண் இணை இயக்குனர் (பொறுப்பு) அமலதாஸ், வேளாண் உதவி துணை இயக்குனர் மாரியப்பன், கலெக்டரின் நேர்முக உதவியாளர்(வேளாண்மை) அக்கண்டராவ் உட்பட பல்வேறு துறை அதிகாரிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் பேசுகையில், 'விவசாயிகள் செலுத்த வேண்டிய கடனுக்காக, 100 நாள் வேலை திட்டத்தில் வழங்கப்படும் கூலியையும், சமையல் காஸ் மானியத்தையும் வங்கிக்கணக்கில் வரவு வைக்கும் நடவடிக்கையை கைவிட வேண்டும். வங்கிகளில் இந்த செயல்பாடு விவசாயிகளின் உரிமையை அபகரிப்பதாகும். தண்டராம்பட்டு பகுதியில் நெல் சாகுபடி அதிகம் நடக்கிறது. ஆனால், இந்த தாலுகாவில் மார்க்கெட் கமிட்டி இதுவரை அமையவில்லை. மார்க்கெட் கமிட்டி அமைத்தால் சுமார் 45 கிராம விவசாயிகள் நேரடியாக

பயன்பெற வாய்ப்புள்ளது. வறட்சியால் விவசாயம் பாதித்திருக்கிறது. எனவே, கால்நடைகளை மட்டுமே நம்பியிருக்கிறோம். ஆனால், பால் கொள்முதல் செய்யாமல் ஆவின் நிர்வாகம் வஞ்சிக்கிறது. வாரத்துக்கு ஒரு நாள் பால் கொள்முதல் செய்வதற்கு விடுமுறை அளிப்பதையும், லிட்டருக்கு 300 மி.லி பால் கொள்முதல் செய்ய மறுப்பதையும் ஆவின் நிர்வாகம் கைவிட வேண்டும். திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஏரிகள் நிரம்பாததற்கு மிக முக்கிய காரணம், சீமை கருவேல மரங்கள். அதனால், நிலத்தடி நீர் வீணாகிறது. மேலும், நீர் வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்பில் சிக்கியிருக்கிறது. எனவே, சீமை கருவேல மரங்களை முழுமையாக அழிக்க மாவட்ட நிர்வாகம் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். நீர்வரத்து கால்வாய்கள் ஆக்கிரமிப்புகளை பாரபட்சமின்றி அகற்ற வேண்டும். மழையில்லாத காரணத்தால், மணிலா பயிர் மகசூல் இழந்துவிட்டது. எனவே, இந்த ஆண்டாவது வறட்சி நிவாரணம் கிடைக்க வழிசெய்ய வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினார். அதைத்தொடர்ந்து, கலெக்டர் ஞானசேகரன் பேசுகையில், ‘சீமை கருவேல மரங்களை அழிக்க தேவையான முயற்சிகள் நடந்து வருகிறது. பொதுப்பணித்துறை மூலம் இப்பணியை நிறைவேற்ற அரசுக்கு திட்ட அறிக்கை அனுப்பியிருக்கிறோம். அரசுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சீமை கருவேல மரங்கள் அழிக்கப்படும். அதேபோல், தனி நபர்களுக்கு சொந்தமான இடங்களில் உள்ள சீமை கருவேல மரங்களை அழிக்க பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும்’ என்றார்.

**புதுகை மாவட்டத்தில் நிலத்துக்கு பசுந்தாள் உரமிட்டால் மண் வளத்தை மேம்படுத்தலாம் வேளாண் துறை தகவல்**

அறந்தாங்கி, : புதுக்கோட்டை மாவட்டத்தில் பசுந்தாள் உரமிட்டால் நிலத்தில் மண் வளத்தை மேம்படுத்தலாம் என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் நிலத்துக்கு பசுந்தாள் உரமிட்டு மண்ணின் வளத்தை மேம்படுத்துமாறு வேளாண் உதவி

இயக்குநர் தியாகராஜன் விவசாயிகளுக்கு வேண்டுகொள் விடுத்துள்ளார். இதுகுறித்து அவர் கூறியதாவது: பசுந்தாள் உயிர்களில் மிகவும் முக்கியமானவை சணப்பு, தக்கை பூண்டு மற்றும் கொழுஞ்சி ஆகியனவாகும். இவற்றில் சணப்பு, தக்கை பூண்டு ஆகிய பயிர்கள் எல்லா வகை நிலங்களுக்கும் ஏற்றவையாகும். இதில் தக்கைபூண்டு களர் உவர் நிலங்களில் நன்கு வளரும் தன்மையுடையது. பசுந்தாள் உரப் பயிர்களை 40 முதல் 60 நாட்கள் வளர்த்தால் போதுமானது. நீண்ட நாட்கள் வளர்ந்த பசுந்தாள் உரப்பயிரில் நார்த்தன்மை அதிகமாக மக்கும் தன்மை குறையும் என்தால் பசுந்தாள் உரப்பயிர்களை 35ல் இருந்து 45 நாட்கள் வரை அலலது பூக்கும் தருணத்திற்கு முன்பு மடக்கி உழுவது சாலச் சிறந்ததாகும். இவ்வாறு மடக்கி உழும்போது பசுந்தாள் உர பயிர்களில் உள்ள பேரூட்ட மற்றும் நுண்ணூட்ட சத்துக்களை மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் வெளிக்கொண்டு வருகின்றன. இதனால் பயிர்களுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்கப்பெற்று பயிர்கள் செழித்து வளர்கின்றன. மேலும், இந்த பசுந்தாள் உரப்பயிர்களை தென்னந்தோப்பில் பயிர் செய்து மடக்கி உழுவதால் மண்வளம் அதிகரிப்பதோடு ஒல்லிக்காய், தேங்காயில் ஒடு கீறுதல் போன்ற நுண்ணூட்ட பற்றாக்குறையினால் ஏற்படும் குறைபாடுகள் நிவர்த்தி அடைகின்றன. மேலும் தேங்காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு திறட்சியாகவும் வளரும் என்பதால் தென்னை பயிருக்கு பசுந்தாள் உரங்கள் மிகவும் உகந்தவை. பசுந்தாள் உரங்களை பயன்படுத்துவதால் நுண்ணுயிர்களின் பெருக்கம் அதிகரிக்கும். எனவே அவைகளில் இருந்து பலவிதமான அங்கக அமிலங்கள், வளர்ச்சி ஊக்கிகள் வெளியிடப்படுகிறது. மேலும் மண்ணின் இறுக்கத்தை குறைக்கிறது. இவை மண் போர்வை போல செயல்பட்டு நீர் ஆவியாவதை தடுக்கிறது. மண்ணில் அடியில் விளைவிக்கும் உப்பு மேல் மட்டத்திற்கு வரவிடாமல் தடுக்கிறது. எனவே விவசாயிகள் பசுந்தாள் உரங்களை வாங்கி பயன்பெறலாம். மேலும் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பசுந்தாள்

உர விதைகளை 50 சதவிகித மானியத்தில் வாங்கி பயனடையலாம் என்றார்.

**பான் இந்தியா திட்டத்தை அமல்படுத்த நடவடிக்கை**

குன்னூர், : இந்தியாவில் சிலி குரி, கவுகாத்தி, கொல்கத்தா, கொச்சின், கோவை, குன்னூர், நார்த் பெங்கால் ஆகிய பகுதிகளில் 8 தேயிலை ஏல மையங்கள் உள்ளன. இதில் அந்தந்த தேயிலை ஏல மையங்களில் உறுப்பினராக உள்ளவர்கள் ஆன்லைன் மூலம் ஏலத்தில் பங்கேற்று அந்தந்த மையத்தில் உள்ள தேயிலை தூள்களை கொள்முதல் செய்து வருகின்றனர். இந்நிலையில், இந்திய தேயிலை வாரியத்தின் சார்பில் பான் இந்தியா திட்டம் கொண்டு வரப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் உள்ள வர்த்தகர்கள் ஆன் லைன் மூலம் ஒரே நேரத்தில் அனைத்து ஏல மையங்களிலும் பங்கேற்கும் வகையில் திட்டமிடப்பட்டு கடந்தாண்டு குன்னூரில் நடந்த உபாசி சிறப்பு ஏல மையத்தில் நடந்த ஏலத்தில் வெள்ளோட்டம் பார்க்கப்பட்டது. இதனை தொடர்ந்து பான் இந்தியா திட்டத்தை அமல்படுத்தும் வகையில் மத்திய வர்த்தக துறை அமைச்சகம் சார்பில் நடைமுறை சட்ட திட்டங்கள் தயார் செய்து இதனை நாடுமுழுவதும் உள்ள ஏல மையங்களுக்கு சுற்றறிக்கையாக அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இதுதொடர்பாக வர்த்தகர்களிடம் கருத்து கேட்கப்பட்டு அதன் பின்னர் விரைவில் பான் இந்தியா திட்டத்தை அமல்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளதாக தேயிலை வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**வாழைக்கன்றில் விதை நேர்த்தி செய்வது எப்படி? வேளாண் மாணவர்கள் செய்முறை விளக்கம்**

அரியலூர், : வாழைக்கன்றில் எப்படி விதை நேர்த்தி செய்ய வேண்டும் என்று விவசாயிகளுக்கு வேளாண் கல்லூரி மாணவர்கள் செயல் விளக்கமளித்தனர். அரியலூர் மாவட்டம் தா.பழூர் ஒன்றியம்,

சோழன்மாதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தில் திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி மாணவர்கள் மற்றும் ரோவர் வேளாண் கல்லூரி மாணவிகள் இணைந்து விவசாய கண்காட்சி மற்றும் பயிற்சி முகாமினை நடத்தினர். இதில் காளாண் வளர்ப்பு, வாழைக்கன்று நேர்த்தி, நெல்விதை நேர்த்தி, முருங்கையில் புடலை ஊடு பயிர், அசோலா உற்பத்தி, பாலீத்தின் பயன்படுத்தி களையை கட்டுப்படுத்துதல், இனக்கவர்ச்சி பொறியை பயன்படுத்துல், பாலீத்தின் தொட்டியில் சாண எரிவாயு உற்பத்தி செய்தல், ஒருங்கினைந்த பண்ணை தொழில் நுட்பம், தண்ணீர் பாட்டில்களைப் பயன்படுத்தி பூந்தோட்டம் அமைத்தல், நீடித்த நிலையான கரும்பு சாகுபடி, திருந்திய நெல்சாகுபடி, மண்புழு உரம் தயாரித்தல், இலைக்கரைசல் தயாரித்து பயன்படுத்தும் முறை, காய்ப்புழு கட்டுப்படுத்தும் முறை போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களுக்கு செயல் விளக்கம் அளித்தனர். இக்கண்காட்சியை கிரீடு அறிவியல் நிலையத்தின் தலைவர் நடனசபாபதி தலைமை வகித்து துவக்கி வைத்தார். மண்ணியியல் பேராசிரியர் பாஸ்கர், பயிர் பெருக்கம் துறையைச் சேர்ந்த சுரேஷ், தோட்டக்கலை பேராசிரியர் முருகானந்தம் மற்றும் வேளாண் விரிவாக்கம் துறையைச் சேர்ந்த ராஜ்கலா ஆகியோர் கலந்து கொண்டு மண்வளத்தை அதிகரித்தல், இயற்கை விவசாயம் பற்றி அறிவுரைகளையும் பரிந்துரைகளையும் கூறினர். இந்நிகழ்ச்சியில் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்த ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

**பெரம்பலூர் மாவட்டத்தில் பரிதாபத்தில் பருத்தி சாகுபடி: மக்காச்சோளத்திற்கு மவுசு**

பெரம்பலூர், : பெரம்பலூர் மாவட்டத்தில் கடந்த ஆண்டைக் காட்டிலும் மக்காச்சோள சாகுபடி 34 ஆயிரம் ஏக்கர் அதிகரித்தது. பருவமழை பாதிப்பு மற்றும் கூலியாட்கள் தட்டுப்பாட்டால் பருத்தி சாகுபடி 43 ஆயிரம் ஏக்கர் குறைந்தது. பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயம் கிணற்றுப் பாசனத்தை நம்பியுள்ளது. இங்குள்ள பெரும்பாலான

விவசாயிகள் மானாவாரி சாகுபடியே மேற்கொண்டு வருகின்றனர். குறைந்த அளவு தண்ணீரைக் கொண்டு சாகுபடி செய்கிறபோதே சின்னவெங்காயம், பருத்தி, மக்காச்சோளம் ஆகியவற்றில் கடந்த 5, 6 ஆண்டுகளாக தமிழக அளவில் பெரம்பலூர் மாவட்டம் முதலிடத்தையே பெற்று வருகிறது. குறிப்பாக மக்காச்சோள சாகுபடி ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. கடந்த 2014ம் ஆண்டு பெரம்பலூர் மாவட்டத்தில் மக்காச்சோளம் 90,925 ஏக்கர் பரப்பளவில் மட்டுமே சாகுபடி செய்யப்பட்டது. நடப்பாண்டு இதுவரை 88,292 ஏக்கர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து டிசம்பருக்குள் 37,050 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுவிடும். இதன்படி நடப்பாண்டு, 1,25,342 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. இது கடந்த ஆண்டைக் காட்டிலும் 34,417 ஏக்கர் கூடுதல் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

மக்காச்சோள சாகுபடி ஆண்டுக்காண்டு அதிகரித்து வரும் நிலையில் பருத்தி யின் நிலமைதான் பரிதாபமாக உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் நடப்பாண்டு 45,650 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள நாட்களில் 9,880 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்படவுள்ளது. இதன்படி நடப்பாண்டு 55,530 ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு பருத்தியும் தொடர்ந்து முதலிடத்தைத் தக்க வைத்துள்ளது. கடந்த ஆண்டிலோ 98,921 ஏக்கரில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் நடப்பாண்டு 43,391ஏக்கர் சாகுபடி பரப்பளவு குறைந்துள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.சாகுபடிக்கும், அறுவடைக்குத் தேவையான கூலியாட்கள் பற்றாக்குறை, உற்பத்தி செலவுக்கு ஏற்றபடி சரியான விற்பனை விலை கிட்டாதது, பருவம் தப்பி மழைபெய்வதால் பாதிக்கப்படும் பருத்தியால் ஏற்படும் இழப்புகள் போன்ற காரணங்களால் பருத்தி சாகுபடி படிப்படியாகக் குறைந்து வருகிறது. குறிப்பாக ஒருடன் பருத்தியை உற்பத்தி செய்ய ரூ32ஆயிரம்

செலவிடும் விவசாயிக்கு, அதனை விற்கும்போது டன்னுக்கு ரூ39ஆயிரம் மட்டுமே கிடைக்கிறது. 6 மாதங்கள் இயற்கையோடு போராடி வெறும் 7ஆயிரம் மட்டுமே கிடைப்பது பருத்தி சாகுபடியாளர்களை உளவியல் ரீதியாக பாதிப்படையச் செய்கிறது. ஆனால், மக்காச்சோள சாகுபடியிலோ பருத்தியை போன்று 3 பட்டங்களில் அறு வடை செய்ய தேவையில்லாமல் ஒரேசமயத்தில் அறுவடை செய்கிற வசதி, மழையால் பெரிய பாதிப்பு இல்லாதது, இயந்திரத்தின் மூலம் அறுவடை, விதைகளை பிரித்தெடுத்தல் எளிதாவதால் மக்காச்சோள சாகுபடிக்கு மவுசு அதிகரித்து வருகிறது. அதோடு, ஒரு டன் சாகுபடி செய்வதற்கு ரூ.4ஆயிரம் செலவு செய்தாலே போதும். விற்கும்போது ஒரு டன் மக்காச்சோளம் குறைந்தது ரூ.11 ஆயிரம் வரைக்கும் விற்கப்படுவதால் 7 ஆயிரம் கூடுதலாகக் கிடைக்கிறது.

இதனால் முதலிடத்திலுள்ள பெரம்பலூர் மாவட்ட பருத்தி விவசாயிகளே படிப்ப டியாக மக்காச்சோள சாகுபடிக்கு மாறி வருவது கண்கூடாகத் தெரிகிறது. இதில் நடப்பாண்டு மக்காச்சோளம் 2,50,684 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்பட்டாலும், அவற்றின் பெரும் பகுதி நாமக்கல், சேலம் மாவட்டங்களில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு, கோழி, மாடுகளுக்குத் தீவனமாகவே பயன்படுத்தப்பட உள்ளது. சிலஆண்டுகளாக குலுக்கோஸ், எத்தனால் தயாரிக்கவும் மலேசியாவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மும்மடங்கு லாபம்

இங்கு மக்காச்சோளத்தை கிலோ ரூ.11 முதல் ரூ.14 வரை விலை வைத்து கொள்முதல் செய்யும் வியாபாரிகள் அதனை சுத்தப்படுத்தி பேக்கிங் செய்து மலேசியாவில் கிலோ ரூ.40க்கு விற்கின்றனர். இதனையே இடைத் தரகரின்றி விவசாயிகள் மேற்கொண்டால் மலேசிய விலைக்குப் பாதி விலை கிடைத்தால் கூட விவசாயிகளுக்கு கிலோவுக்கு ரூ.20 கிடைக்கும் வழியிருப்பதை உணர்ந்து அரசுதான் விவசாயிகளுக்கு நவீன உபகரணங்களை அளித்து உதவ வேண்டும் என விவசாய ஆர்வலர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

**கூடுதல் விலைக்கு உரம் விற்றால் நடவடிக்கை**

நெல்லை, : நெல்லை மாவட்ட கலெக்டர் கருணாகரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: நெல்லை மாவட்டத்தில் வேளாண் உற்பத்தியை பெருக்கிடும் வகையில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா மற்றும் டிஏபி உரங்களை போதிய அளவு இருப்பு வைத்திட வேண்டும். வேளாண் இடுபொருட்கள், விதைகள், உரங்கள், பூச்சி கொல்லிகள் முதலியவற்றை விவசாயிகளின் தேவைகள் அறிந்து போதிய அளவு வழங்க வேண்டும். நெல்லை மாவட்டத்தில் உர விற்பனையாளர்கள், உர மொத்த விற்பனையாளர்கள் நிர்ணயிக்கப்பட்ட விலையில் உரங்களை விற்பனை செய்ய வேண்டும். கூடுதல் விலைக்கு உரங்களை விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். விலைப்பட்டியல் குறித்த விபர பலகை வைப்பதோடு, வாங்க வரும் விவசாயிகளுக்கு இடுபொருட்களை கட்டாயத்தின் பேரில் வழங்க கூடாது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தி இந்து
தமிழால் இணைவோம்

## அரசுப் பணி துறந்து காளான் வளர்க்கும் ஆசிரியர்: தேசிய விருதுடன் இளைஞர்களுக்கு வழிகாட்டுகிறார்



அரசுப் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றுக் காளான் வளர்க்கும் ஆசிரியர், அதற்காகத் தேசிய விருதைப் பெற்றுள்ளார். அத்துடன் நின்றுவிடாமல், காளான் வளர்க்கும் வழிமுறைகளை இளைஞர்களுக்குக் கற்றுத்தந்துவருகிறார்.

**கிராமம் தந்த விழிப்புணர்வு**

புதுச்சேரி கூடப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்தவர் சுந்தரமூர்த்தி. அரசுப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வந்த இவர், அறிவொளி இயக்கத்திலும் ஆர்வத்துடன் இயங்கியவர். பணிக் காலத்தில் காளான் வளர்ப்பு குறித்துக் கேட்டறிந்த அவர், அதில் முழுமையாகப் பயிற்சி பெற்று அரசு பணியில் இருந்து விருப்ப ஓய்வு பெற்றார். தற்போது கோனேரிக்குப்பம் கிராமத்தில் காளான் வளர்ப்பு மற்றும் விதை

உற்பத்திப் பண்ணையை நடத்திவரும் இவர், ஏராளமான இளைஞர்களுக்குக் காளான் வளர்க்கப் பயிற்சியும், விற்பனை செய்வதற்குரிய வழிமுறைகளையும் அளித்து வழிகாட்டி வருகிறார். இது தொடர்பாக சுந்தரமூர்த்தி பகிர்ந்துகொண்டது:

அறிவொளி இயக்கத்தில் இருந்த காலத்தில், கிராமங்களுக்குச் செல்லும்போது வேளாண் திட்டங்களில் ஆர்வம் ஏற்பட்டது. அப்போது காளான் வளர்ப்பு தொடர்பாகக் கற்றுக்கொண்டு,ஆர்வமுள்ள மற்றவர்களுக்குக் கற்றுத்தரத் தொடங்கினேன்.

**தேசிய விருது**

காளான் வளர்ப்பு ஆர்வம் அதிகரிக்க, 2007-ல் ஆசிரியர் பணியிலிருந்து விருப்ப ஓய்வு பெற்றேன். அப்போது எல்லோரும் விநோதமாகத்தான் பார்த்தார்கள். அரசு வேலையை நம்பியிருக்காமல் சுயதொழில் செய்து, முன்மாதிரியாக இருக்க விரும்பினேன். நம் நாட்டில் விவசாயம் சார்ந்த மாற்று உணவுப்பொருள் உற்பத்தி அதிகரிக்க வேண்டும். உணவு காளானுக்கு நம்மூரில் நல்ல வரவேற்பு உள்ளது. அதனால், உணவுக் காளான்களைப் பற்றி முழுமையாக அறிந்தேன்.

அசைவ உணவைப் போன்று காளானிலிருந்து அதிகப் புரதம் கிடைக்கிறது. பல்வேறு நோய்களைத் தடுக்கும் உணவாகவும் காளான் உள்ளது. தொடர் முயற்சியாலும் பலருடைய உதவியாலும் பல்வேறு தொழில்நுணுக்கங்களைக் கற்றேன். பிறகு காளான் உற்பத்தியும், காளான் விதை உற்பத்தியும் செய்யத் தொடங்கினேன். அதற்காகச் சிறந்த காளான் மற்றும் விதை உற்பத்தியாளருக்கான தேசிய விருதை 2012-ல் பெற்றேன்.

**கூரைக்குடில் சாகுபடி**

இப்போது சிப்பிக் காளான், பால் காளான் ஆகியவற்றை உணவுக்காக உற்பத்தி செய்வதுடன், காளான் விதை உற்பத்தியும் செய்துவருகிறேன். இது மிகவும் லாபகரமான தொழில். காளான் சைவ உணவு. ரசாயனப்

பொருளோ, பூச்சிக்கொல்லியோ இல்லாமல் விஞ்ஞானரீதியாகக் காளானை உற்பத்தி செய்யலாம். சிப்பிக் காளான் ருசி அதிகமுள்ளது. மசாலாப் பொருட்களை உறிஞ்சிக்கொள்ளும். மிருதுவாக இருக்கும்.

மற்ற காய்கறிகளை நிலத்தில் உழுவார்கள். காளானை மண்ணில் விதை போட்டு உற்பத்தி செய்வதில்லை. விவசாயக் கழிவுகளான வைக்கோல், கம்புத்தட்டை, கேழ்வரகுத் தட்டை, மணிலாக்கொடி, கரும்பு போன்ற தாவரங்களின் சருகு போன்ற பொருட்களை சுத்தமான தண்ணீரில் ஊற வைத்து, தொற்றுநீக்கம் செய்து,அவற்றில் காளான் விதையை இட்டு உற்பத்தி செய்ய வேண்டும்.

**நாள் ஒன்றுக்கு 30 கிலோ**

காளான் வளர்க்கக் கூரைக்குடில்களை அமைக்க வேண்டும். குடிலில் 400 படுக்கைகள் வரை வைக்கலாம். அவற்றில் காளானை விளைவித்து அறுவடை செய்கிறோம். ஒரு வாரத்தில் ஒரு குடில் நிரம்பிவிடும். ஒரே நாளில் அனைத்துப் படுக்கைகளையும் வெளியே எடுத்துக் காளானை எடுத்துவிட்டு, குடிலைத் தூய்மைப்படுத்திவிடுவோம். இதனால் குடிலில் பூச்சி இருக்காது. மறுபடியும் நல்ல மகசூல் கிடைக்கும். இம்முறையைப் பின்பற்றினால் காளான் உற்பத்தி லாபகரமாக அமையும்.

சிப்பிக் காளான் படுக்கையொன்றில் சுமார் ஒரு கிலோவரை உற்பத்தியாகும். நாள் ஒன்றுக்கு 30 கிலோ சிப்பிக் காளானை எளிதாக உற்பத்தி செய்யலாம். உற்பத்தியாகும் காளானைப் புதுச்சேரி உழவர் சந்தை, பெரிய மார்க்கெட், காளான் சூப் கடைகளுக்கு நானே சென்று விற்பனைக்குக் கொடுத்துவருகிறேன்.

**வழிகாட்டி**

காளான் வளர்ப்புத் தொழிலில் ஈடுபடுவோர்க்குப் புதுச்சேரி அரசின் வேளாண் அறிவியல் நிலையம் சார்பில் சிறப்பு மானியம் வழங்கப்படுகிறது. நிலையத்தின் விற்பனைக்கூடங்கள் மூலம் காளான் விற்பனை செய்யவும் உதவுகிறார்கள்.

ஆயிரக்கணக்கான இளைஞர் களுக்குக் காளான் வளர்ப்பு பற்றி கற்றுத்தந்துள்ளேன். ஒரு நாள் முழுக்கச் செலவிட்டால் காளான் வளர்ப்பைக் கற்றுக்கொள்ளலாம். படித்த இளைஞர்கள் சம்பளம் தரும் வேலையை மட்டும் நம்பி இருக்காமல், இத்தொழிலில் குறைந்தபட்சம் ரூ. 2 லட்சம் முதலீடு செய்தால், மாதம் ரூ. 20 ஆயிரம்வரை வருமானம் கிடைக்கும். சொந்தக்காலில் நிற்கலாம்.

காளான் வளர்ப்பு பற்றி பல இடங்களுக்கு நேரில் சென்றும் விளக்கம் தந்துவருகிறேன். காளான் வளர்ப்பு மூலம் கிராமப் பகுதிகளில் நிச்சயம் வறுமையை வெல்ல முடியும்.

- சுந்தரமூர்த்தி தொடர்புக்கு: 97879 81973

மாலைமலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## **தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று மழை பெய்யும்: வானிலை மையம் அறிவிப்பு**



சென்னை, அக்.19-

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரியாக அக்டோபர் மாதம் 20-ந்தேதி தொடங்கும் நிலை உள்ளது. அதாவது 20-ந்தேதிக்கு சில நாட்கள் முன்பு தொடங்கலாம் அல்லது சில நாட்கள் பின்னர் தொடங்கலாம். சராசரியாக தொடங்கும் நாள் இந்த வருடம் தள்ளி போக வாய்ப்பு இருக்கிறது. வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்டது என்றால் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து அநேக இடங்களில் மழை பெய்யும். அப்படி இதுவரை எந்த அறிகுறியும் தெரியவில்லை. எனவே இந்த வருடம் 20-ந்தேதிக்கு பின்னர் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது. இந்தநிலையில் இன்று தமிழ்நாடு முழுவதும் சில இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறுகையில் கன்னியாகுமரி அருகே மேலடுக்கில் சுழற்சி உள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் இன்று(திங்கட்கிழமை) மழைபெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வடமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மழை பெய்யும் என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**"இயற்கை நிகழ்வுகளே புதிய அறிவியல் கண்டுபிடிப்புக்கு அடிப்படை காரணம்'**

இயற்கை நிகழ்வுகளே புதிய அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கு அடிப்படை காரணம் என விஞ்ஞானி சி.திருஞானசம்பந்தம் தெரிவித்தார். அரூரை அடுத்த சந்தப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் நேர்படப் பேசு கலந்துரையாடல் நிகழ்ச்சி பள்ளித் தலைமை ஆசிரியர் அ.அண்ணாதுரை தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதில் இந்திய பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த (டி.ஆர்.டி.ஓ) வானூர்தியியல் விஞ்ஞானி சி.திருஞானசம்பந்தம் பேசியது: தேன்சிட்டு குருவி தமது சிறகுகளை மிக வேகமாக அடிப்பதன் மூலம் ஒரே இடத்தில் நிலை நிறுத்த முடியும். சிறகுகள் சிறியதாக இருந்தால் பறவைகள் வேகமாக பறக்க முடியும். ஆனால், அதிக தொலைவு செல்ல முடியாது. இதேபோல், சிறகுகள் பெரிய அளவில் இருந்தால் வேகமாக பறக்க முடியாது. ஆனால் நீண்ட தொலைவு செல்ல முடியும். இதுபோன்ற இயற்கை நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டே விமானம், ஹெலிகாப்டர், ராக்கெட் உள்ளிட்ட விமான கண்டுபிடிப்புகளை கண்டறியப்பட்டன. ஆசிரியர்களுடன் நல்லுறவை மாணவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். அனைத்து சாதனையாளர்களின் வெற்றிக்குப் பின்னாலும் ஆசிரியர் ஒருவர் இருப்பார். எனவே சாதிக்க நினைப்பவர்களுக்கு ஆசியர்களின் வழிகாட்டுதல் மிக அவசியம். இந்திய அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியில் பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவத்தின் பங்களிப்பு மிக அதிகம். பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்தில் 52 மையமும், 5 ஆயிரம் விஞ்ஞானிகள், 25

ஆயிரம் தொழில்நுட்ப வல்லுநர்கள் உள்ளனர். இந்த அமைப்பின் வாயிலாக பீரங்கிகள், ஏவுகணைகள், ராக்கெட்டுகள், போர் விமானங்கள் உள்ளிட்ட புதிய, புதிய கண்டுபிடிப்புகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன என்றார்.

**நுகர்வோரே விழித்திருங்கள்...**

நாம் கடையில் சென்று ஒரு பொருளை வாங்கும்போது, பெரும்பாலானோர் அதில் ஐ.எஸ்.ஐ. முத்திரை அல்லது அக்மார்க் முத்திரை உள்ளதா என கவனிப்பதில்லை. மேலும் பலர் தயாரிப்பு தேதி, காலாவதி தேதியையும் பார்ப்பதில்லை. பொதுமக்களின் இந்த அறியாமையை சில வியாபாரிகள் பயன்படுத்தி தங்களது பொருள்களை விற்பனை செய்து விடுகிறார்கள். எனவே, நுகர்வோர் விழிப்புணர்வு என்பது மிகவும் அவசியமாகிறது. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, பகுதி2(1)(டி) பிரிவின்படி நுகர்வோர் என்பதன் விளக்கம், பணம் கொடுத்து ஒரு பொருளையோ, பணியையோ, சேவையையோ தன் சொந்த உபயோகத்திற்கு பெறும் ஒருவர் நுகர்வோர் ஆவர். பொருளை வணிக நோக்கத்துடன் வாங்கும் நபர் நுகர்வோராக இருக்க முடியாது. இருப்பினும், தனது சுய வேலைவாய்ப்பிற்காக அல்லது தனது வாழ்வின் ஆதாரத்திற்கான பொருளை வாங்கியிருப்பவர் அவர் நுகர்வோராகக் கருதப்படுவார். பொருளின் தரம், எடை, அளவு, தூய்மை போன்றவற்றில் குறைபாடு இருந்தால் அந்தப் பொருளை தரமற்ற பொருள் என கருத வேண்டும்.

நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் 1986, பிரிவு2(1)(ஜி) பிரிவின் படி பணம் கொடுத்து சேவையைப் பெற்றுக்கொள்ளும்போது, வாக்களித்தபடி சேவை கொடுக்கப்படாமல் சேவை பெற்றவரை இன்னல்களுக்கு ஆளாக்குவது சேவை குறைபாடு ஆகும். உதாரணமாக, பேருந்து பயணத்தின் போது பணம் கொடுத்து பேருந்தில் பயணிக்கும்போது ஓட்டுநர் அல்லது நடத்துநர் நம்மை தரக்குறைவான

வார்த்தைகளால் திட்டினால் அல்லது குறிப்பிட்ட நிறுத்தத்தில் பேருந்தை நிறுத்தாவிட்டால் அது சேவை குறைபாடு ஆகிறது. இது பணம் கொடுத்து வாங்கும் சேவைகள் (சர்வீஸ்) எனப்படும். தொலைபேசி சேவை, காப்பீடு சேவை, பணம் கொடுத்துப் பெறும் மருத்துவச் சேவை, வங்கிச் சேவை, ரயில்வே சேவை, உணவு விடுதி உள்ளிட்டவையும் இதுபோன்ற பணம் கொடுத்து வாங்கும் இதர சேவைகள்.

நுகர்வோர் சேவை குறைபாடுகள், பொருள்களின் அளவு, தரம் குறித்து புகாரின் தன்மையைப் பொருத்து மாவட்ட, மாநில, தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்திடம் புகார் செய்யலாம். கோரும் நஷ்டஈட்டுத் தொகை ரூ.20 லட்சம் வரை இருந்தால் மாவட்ட நீதிமன்றத்திலும், ரூ.20 லட்சத்திற்குமேல் ஒரு கோடி ரூபாய் வரை இருந்தால் மாநில நுகர்வோர் நீதிமன்றத்திலும், ரூபாய் ஒரு கோடிக்கு மேற்பட்டு இருந்தால் தேசிய நுகர்வோர் தீர் ஆணையத்திடம் நேரடியாகப் புகார் செய்யலாம். பொருள் அல்லது சேவையை விலைகொடுத்து வாங்கிய நபர், பதிவு செய்யப்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்பு, மத்திய, மாநில அரசு, ஒத்த நோக்கங்களைக் கொண்ட நுகர்வோரின் சார்பில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நுகர்வோர் கூட்டாக புகார் செய்யலாம். நீங்கள் நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் செய்யும் முன்னர் வாங்கிய பொருள்களுக்கான ரசீதை அவசியம் வைத்திருக்க வேண்டும். அனைத்து மூல ஆவணங்களையும் ஒரு கோப்பில் வைத்திருங்கள். நீதிமன்ற உத்தரவின்றி வேறு எவரிடமும் அதைக் கொடுக்காதீர்கள். தேவைப்படும்போது நகல் எடுத்து பயன்படுத்துங்கள். புகார் செய்பவரின் பெயர் மற்றும் முழுமையான முகவரி, எதிர்தரப்பினர் பெயர் மற்றும் முழுமையான முகவரி, பொருள் வாங்கிய மற்றும் சேவை பெற்ற தேதி, செலுத்தப்பட்ட தொகை, பொருள்களின் விவரம், வர்த்தக

நடைமுறை, குறையுள்ள பொருள், சேவையில் குறைபாடு, கூடுதல் கட்டணம் வசூலித்தது, இவற்றில் எதைப் பற்றி கூற வேண்டுமோ அது குறித்து தெளிவாகக் குறிப்பிட வேண்டும்.

பட்டியல், ரசீது நகல்கள், இதுதொடர்பான கடிதப் போக்குவரத்து இருப்பின் அதன் நகல்கள், இந்தச் சட்டத்தின் கீழ் எதிர்நோக்கும் நிவாரணத் தொகை உள்ளிட்ட விவரங்கள் நீங்கள் அளிக்கும் புகாரில் இருக்க வேண்டும். மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் செய்ய, ஒரு லட்சம் ரூபாய் வரை நஷ்டஈடு கோரினால் ரூ.100-ம், ஒன்று முதல் ஐந்து லட்சம் வரை ரூ.200-ம், ஐந்து லட்சம் முதல் 10 லட்சம் வரை ரூ.400-ம், 10 லட்சம் முதல் 20 லட்சம் வரை ரூ.500-ம் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியின் வரைவு காசோலையாக புகாருடன் இணைக்க வேண்டும்.

மாநில நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் செய்ய ரூ.20 லட்சம் முதல் ரூ.50 லட்சம் வரை ரூ.2,000-ம், 50 லட்சம் முதல் ஒரு கோடி ரூபாய் வரை ரூ.4,000-ம் வரைவு காசோலை இணைக்க வேண்டும்.

தேசிய நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் செய்ய ஒரு கோடி ரூபாய்க்கு மேல் ரூ.5,000}துக்கு வரைவு காசோலையை இணைக்க வேண்டும்.

தில்லியில் ரயில் நிலையத்தில் ரயிலில் ஏறி அமர்ந்திருந்த பயணியிடம், திருடன் ஜன்னல் வழியே நகையைப் பறித்துக்கொண்டு தப்பியோடிவிட்டான். இதுகுறித்து பாதிக்கப்பட்டவர் ரயில்வே சேவை குறைபாட்டினால்தான் திருட்டு நடைபெற்றது என நுகர்வோர் நீதிமன்றத்தில் புகார் செய்தார்.

வழக்கை விசாரித்த நீதிபதி, ரயில்வே நிலையத்திற்குள் கட்டணம் செலுத்திய பின்னர்தான் பயணி நிலையத்திற்குள் வருகிறார்.

எனவே, திருட்டு நடைபெற்றது ரயில்வே துறையின் சேவை குறைபாடுதான். உரிய நஷ்டஈட்டை ரயில்வே நிர்வாகம் வழங்க வேண்டும் என நீதிமன்றம் தீர்ப்பளித்தது. எனவே, நுகர்வோரே விழித்திருங்கள்.

**விவசாயிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள்**

புதுக்கோட்டை மாவட்ட விவசாயப் பணிகளுக்குத் தேவையான வேளாண் கருவிகள் மானியவிலையில் விநியோகிக்கப்படுவதாக வேளாண் துறை தகவல் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து புதுகை வேளாண் இணை இயக்குநர் த. சந்திரசேகரன் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தற்போது நிலவி வரும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையைச் சமாளிக்கு வகையில், பருவத்தில் வேளாண் சாகுபடிப் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும் சாகுபடிச் செலவைக் குறைக்கவும் வேளாண் பணிகளில் இயந்திரங்களின் பயன்பாடு அவசியமாகிறது. இதைக் கருத்தில் கொண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் வேளாண் துறை மூலம் பவர்டில்லர், ரோட்டோ வேட்டர், விதைப்புக் கருவிகள் ஆகியவைகள் மானிய விலையில் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் மானிய விலையில் பவர்டில்லர் கருவிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சிறு, குறு, ஆதிதிராவிடர், மகளிர் விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 75 ஆயிரமும். இதர விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 60 ஆயிரமும். தேசிய உணவுப் பாதுகாப்பு (பயறு) திட்டத்தில் ரோட்டோவேட்டர் கருவி சிறு, குறு, ஆதிதிராவிடர் மகளிர் விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 63 ஆயிரமும். இதர விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 50 ஆயிரமும். விதைப்புக் கருவிகள் சிறு, குறு, ஆதிதிராவிடர் மகளிர் விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 50 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 19 ஆயிரமும். இதர விவசாயிகளுக்கு கருவியின் அடிப்படை விலையில் 40 சதவீதம் அல்லது அதிகபட்சமாக ரூ. 15 ஆயிரமும் வழங்கப்படும்.

எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் வேளாண் பொறியியல் துறையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களிலிருந்து விலைப்புள்ளி பெற்று மானியத் தொகை கழித்து விவசாயிகளின் பங்குத் தொகையை வங்கி வரைவோலையாக உரிய சான்றுகளுடன் தங்கள் பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொண்டு தேவையான விவசாயக் கருவிகளைப் பெற விண்ணப்பிக்கலாம்.

**சூரிய கூடார உலர்த்திக்கு மானியம்**

தஞ்சாவூர் மாவட்டத்தில் சூரிய சக்தி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் வகையில், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் மூலம் வேளாண் விளைபொருள்களை சூரிய சக்தியை உபயோகித்து உலர்த்தி பயன்படுத்துவதற்காக தஞ்சாவூர் மாவட்டத்துக்கு 2015-16 ஆம் நிதியாண்டுக்கு இரண்டு சூரிய கூடார உலர்த்தி அமைக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

விவசாயிகள் தங்களது சொந்த இடத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் வழிகாட்டுதலின்படி, சூரிய கூடார உலர்த்திகளை அமைத்துக் கொண்டு அரசு மானியம் பெறலாம். ஒரு சூரிய கூடார உலர்த்தி 400 சதுர அடியில் அமைப்பதற்கு அரசு மானியமாக ரூ.1.21 லட்சம் முதல் ரூ. 1.84 லட்சம் வரை கிடைக்கும்.

சூரிய கூடார உலர்த்திகள் மூலம் விவசாயிகள் தங்களது வேளாண் விளை பொருள்களான கொப்பரை தேங்காய், வாழைப்பழம் மற்றும் இதர காய்கறிகளை உலர்த்தி பதப்படுத்தி வைத்துக்கொண்டு சந்தையில் கூடுதல் விலை கிடைக்கும்போது விற்பனை செய்யலாம். இவ்வகை உலர்த்திகளில் காயவைக்கப்படும் வேளாண் விளைபொருள்கள் நிறம், தரம் மற்றும் சுவை குறையாமல் பாதுகாக்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் பயன்பெற விரும்பும் விவசாயிகள் விண்ணப்பத்துடன் இரண்டு புகைப்படம், நிலவரைபட நகல், அடங்கல் மற்றும் கணினி சிட்டாவுடன் பட்டுக்கோட்டை வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தை தொடர்பு கொண்டு விண்ணப்பம்

அளித்து மூதுரிமை அடிப்படையில் சூரிய கூடார உலர்த்திகளை அமைத்துக் கொள்ளலாம் என வேளாண்மை பொறியியல் துறை சார்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

## திருவட்டாறு வட்டாரத்தில் பசுந்தாள் உரப்பயிர் சாகுபடிக்கு 50% மானியம்

திருவட்டாறு வட்டாரத்தில் பசுந்தாள் உரப் பயிர் சாகுபடி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படவுள்ளதாக வட்டார வேளாண் உதவி இயக்குநர் பி. சுசீலா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தேசிய வேளாண் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிகழாண்டில் திருவட்டாறு வட்டாரத்தில் பசுந்தாள் உரப் பயிர் சாகுபடிக்கு 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது. சணப்பு விரைவில் வளரக்கூடிய பசுந்தாள் உரமாகும். இது அனைத்துப் பருவத்திற்கும் சாகுபடிக்கு ஏற்றது. தென்னை மற்றும் வாழைகளுக்கு இடையில் பசுந்தாள் உரப் பயிர்களை வளர்த்து மின் உரமாக மாற்றலாம். இதில் மண்ணின் வளம் அதிகரிக்கும்.

சணப்பு விதை ஒரு ஹெக்டேருக்கு 50 கிலோ தேவைப்படும். இத்துடன் 5 பாக்கெட் ரைசோபியம் உயிர் உரத்தினை கலந்து விதை நேர்த்தி செய்தபின் விதைகளை நிலத்தில் தூவ வேண்டும் அல்லது 30ல10 செ.மீ. இடைவெளியில் விதைக்கலாம். விதைகள் 3 நாள்களுக்குள் முளைத்து விடும் 30 நாள்களுக்கு ஒரு முறை நீர்ப்பாச்ச வேண்டும். விதைத்த 45-60 நாள்களில் சணப்பு செடிகளை மடக்கி உழுது உரமாக்க வேண்டும். ஹெக்டேருக்கு 15 டன் பசுந்தாள் மகசூல் கிடைக்கும்.

திருவட்டாறு வட்டாரத்தில் தென்னை மற்றும் வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் பசுந்தாள் உரப்பயிர் சணப்பு சாகுபடிக்கான மானியம் பெற பசலீ கரத்தீர்வை ரசீது, குடும்ப அட்டை நகல் அல்லது ஆதார் அட்டை நகல், புகைப்படம், வங்கிக் கணக்கு புத்தக நகல் மற்றும் உர விற்பனை நிலையத்தில் சணப்பு விதைகள் வாங்கியதற்கான பட்டியலுடன் உதவி வேளாண் அலுவலர் அல்லது திருவட்டாறு வட்டார வேளாண்

அலுவலரிடம் நேரில் விண்ணப்பிக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**நாளை உழவர் பாதுகாப்புத் திட்ட உறுப்பினர் சேர்க்கை முகாம்**

தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம நிர்வாக அலுவலர் அலுவலகங்களிலும் செவ்வாய்க்கிழமை (அக்.20) உழவர் பாதுகாப்பு திட்ட உறுப்பினர் சேர்க்கை முகாம் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் ம. ரவிகுமார் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டங்களிலும் புதிய உறுப்பினர்களை சேர்க்கவும், ஏற்கெனவே பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு உதவித்தொகைகள் வழங்குவதற்கு மனுக்கள் பெறவும் சிறப்பு முகாம்கள் அந்தந்த பகுதி கிராம நிர்வாக அலுவலகங்களில் செவ்வாய்க்கிழமை (அக். 20) நடைபெறுகிறது.

விவசாயம் சார்ந்த தொழிலில் ஈடுபடுவோர் அந்தந்தப் பகுதியில் உள்ள தங்களது கிராம நிர்வாக அலுவலர் அல்லது வட்டாட்சியர் அலுவலகங்களில் சம்பந்தப்பட்ட சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியரிடம் மனுக்கள் அளிக்கலாம்.

இத்திட்டத்தில் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கு விபத்து மரணம் என்றால் ரூ. 1 லட்சம் உதவித்தொகையும், உறுப்புகள் இழப்பிற்கு ரூ. 20,000 முதல் ரூ.1 லட்சம் வரையிலும், கல்வி உதவித்தொகையாக ரூ. 1,250 முதல் ரூ.6750 (படிக்கும் படிப்பிற்கு ஏற்ப) வரையிலும் வழங்கப்படும்.

மேலும், திருமண உதவித்தொகை என்றால் ஆண்களுக்கு ரூ. 8,000, பெண்களுக்கு ரூ. 10,000, இயற்கை மரண நிவாரணத்திற்கு ரூ. 10,000, ஈமக்கிரியைக்கு ரூ. 2,500, தாற்காலிக உடன் திறனற்ற காலத்துக்கான மாதாந்திர உதவித்தொகையாக (காசநோய், புற்றுநோய், எய்ட்ஸ், மூட்டு முறிவு, நரம்பியல் கோளாறுகள், சிறுநீரக கோளாறுகளால்

பாதிக்கப்பட்டவர்கள்) ரூ. 1000 என்ற அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**வரத்து அதிகரிப்பால் பல்லாரியின் விலை குறைவு**

திருநெல்வேலியில் உள்ள சந்தைகளுக்கு 3 மாதங்களுக்குப் பிறகு பல்லாரி வரத்து அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பல்லாரியின் விலை கணிசமாகக் குறைந்துள்ளது.

இந்தியாவில் விளைவிக்கப்படும் காய்கனி வகைகளில் பல்லாரியின் தேவை மிகவும் அதிகமாகும். வடஇந்திய, தென்இந்திய என அனைத்துவித இந்திய உணவு வகைகளிலும் பல்லாரியின் பயன்பாடு அதிகமாக உள்ளது. மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள புணே மற்றும் சோலாப்பூர், கர்நாடக மாநிலத்தில் உள்ள பெங்களூரு ஆகியவைதான் பல்லாரிக்கான தேசிய சந்தைகளாகும். ஏற்றுமதி அதிகரிப்பு, மழையால் பல்லாரி சாகுபடியில் சேதம் உள்ளிட்ட காரணங்களால் கடந்த 3 மாதங்களாக பல்லாரியின் விலை மிகவும் அதிகரித்தது. பல்லாரியின் விலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக பல்லாரி ஏற்றுமதிக்கு மத்திய அரசு தடை விதித்தது.

இருப்பினும், விலை குறையாமல் நீடித்து வந்தது. இந்த நிலையில் கடந்த 3 நாள்களாக திருநெல்வேலி சந்தைகளுக்கு பெங்களூரில் இருந்து பல்லாரியின் வரத்து மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் விலை கணிசமாகக் குறைந்துள்ளது. கடந்த வாரத்தில் கிலோ ரூ.55-க்கு விற்பனையான பல்லாரி ஞாயிற்றுக்கிழமை கிலோ ரூ.38-க்கு விற்பனையானது.

விலை நிலவரம்: மேலப்பாளையத்தில் உள்ள உழவர்சந்தையில் காய்கனிகளின் விலை நிலவரம் (ஒரு கிலோவுக்கு): கத்தரி-ரூ.32, வெண்டைக்காய்-20, தக்காளி-30, அவரைக்காய்-34, புடலங்காய்-8, பாகற்காய்-18, பீர்க்கங்காய்-12, சுரைக்காய்-8, தடியங்காய்-8, பூசணிக்காய்-8, மிளகாய்-24, மாங்காய்-50, வாழைக்காய்-14 முள்ளங்கி-

18, கொத்தவரை-12, சேனைக்கிழங்கு-30, கருணைக்கிழங்கு-40, சேம்பு-24, மரவள்ளிகிழங்கு-16, இஞ்சி (புதியது)-34, உருளைக்கிழங்கு-24, கேரட்-42, பீட்ரூட்-12, முட்டைகோஸ்-12, சவ்சவ்-12, ரிங்பீன்ஸ்-50, காலிபிளவர்-40, சின்னவெங்காயம்-40, பல்லாரி-38.

இதுகுறித்து வியாபாரிகள் கூறுகையில், மகாராஷ்டிர மாநிலத்தில் இருந்து பல்லாரி வரத்து அதிகரிக்கவில்லை. இன்னும் சில நாள்களில் அங்கிருந்தும் பல்லாரி வந்தால் ஏற்கெனவே விற்பனையான ரூ.20 முதல் ரூ.30-க்குள் பல்லாரியின் விலை கட்டுக்குள் வருவதற்கு வாயப்பு உள்ளது என்றனர்.

**நெல்லை மாவட்டத்தில் பலத்த மழை**

திருநெல்வேலி உள்பட மாவட்டம் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை பலத்த மழை பெய்தது. இதனால், அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. வயல்களில் தண்ணீர் தேங்கியதால், அறுவடைப் பணிகள் பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மிதமான மழை பெய்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியுடன் முடிந்த 24 மணி நேரத்தில் பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்):

ராமநதி அணை 17, கருப்பாநதி அணை 3, குண்டாறு அணை 2, மூலைக்கரைப்பட்டி 19, ஆய்க்குடி 15.2, தென்காசி 24, செங்கோட்டை 1.8, நான்குனேரி 9.5, ராதாபுரம் 11, சேரன்மகாதேவி 1, சிவகிரி 4.2, ஸ்ரீவைகுண்டம் 13.

ஞாயிற்றுக்கிழமை காலை அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, முக்கூடல், வீரவநல்லூர், சேரன்மகாதேவி, பத்தமடை, விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், ஆழ்வார்குறிச்சி, கடையம், கீழஆம்பூர், களக்காடு பகுதியில் 2 மணி நேரம் இடியுடன் பலத்த மழை பெய்தது.

இதனால், வீரவநல்லூர், சேரன்மகாதேவி, பத்தமடை, கொழுமடை, மேலச்செவல் பகுதிகளில் உள்ள வயல்களில் தண்ணீர் தேங்கியதால்

அறுவடை இயந்திரத்தை இறக்க முடியவில்லை. இதனால் அறுவடை பாதிக்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர். மழை நீடித்தால் நெற்பயிர்கள் சேதமடையும் என விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

அருவியில் வெள்ளம்: மேற்குத் தொடர்ச்சி மலையில் நீர்ப்பிடிப்புப் பகுதியில் பெய்த பலத்த மழையால் மணிமுத்தாறு அருவியில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால் குளிக்கத் தடை விதிக்கப்பட்டது. பாபநாசம் அகஸ்தியர் அருவியிலும் அதிகளவில் தண்ணீர் கொட்டியது.

நெல்லை மக்கள் மகிழ்ச்சி: திருநெல்வேலி மாநகரிலும் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பலத்த மழை பெய்தது. பாளையங்கோட்டை, சந்திப்பு, மேலப்பாளையம், கே.டி.சி.நகர், பேட்டை, தாழையூத்து உள்பட அனைத்துப் பகுதிகளிலும் பலத்த மழை பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

குற்றாலம் அருவிகளில் குளிக்கத் தடை

தென்காசி, அக். 18: மேற்குத் தொடர்ச்சி மலையில் தென்காசி, செங்கோட்டை பகுதியில் சனிக்கிழமை இரவில் இருந்து தொடர்ந்து மிதமான மழை பெய்து வருகிறது. ஞாயிற்றுக்கிழமை காலை 2 மணி நேரம் பெய்த பலத்த மழையை தொடர்ந்து குற்றாலம் ஐந்தருவி, பேரருவி, பழைய குற்றாலம் ஆகிய அருவிகளில் திடீரென வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

பேரருவியில் போலீஸ் கண்காணிப்பு கோபுரத்தை தாண்டி தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியதால் அருவிக்கு சென்று குளிக்க முடியாத வகையில் வெள்ளப்பெருக்கு இருந்தது. ஐந்தருவி, பழைய குற்றாலத்திலும் ஏற்பட்ட வெள்ளத்தால் அருவிகளில் குளிக்கத் தடை விதிக்கப்பட்டது. இதனால் சபரிமலை செல்லும் பக்தர்கள், சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

**பசுந்தேயிலை விலை சரிவு: விவசாயிகள் கவலை**

பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைக்காத காரணத்தால் நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பெரும்பாலான தேயிலைக் தூள் குன்னூரிலுள்ள அரசு மற்றும் தனியார் ஏல மையங்கள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. இந்த ஏல மையங்களில் நிர்ணயிக்கப்படும் தேயிலைத் தூளின் விலைக்கு ஏற்றார் போல், பசுந்தேயிலைக்கு உண்டான விலையை உற்பத்தியாளர்கள் விவசாயிகளுக்கு வழங்கி வருகின்றனர். ஆனால், பெரும்பாலான தொழிற்சாலைகள் உரிய விலை வழங்குவது இல்லை என விவசாயிகள் புகார் கூறி வந்தனர். இதனையடுத்து, தேயிலை வாரியத்தின் சார்பில் விலை பகிர்வு திட்டம் அமல்படுத்தப்பட்டது. ஆனால் இதையும் ஒரு சில உற்பத்தியாளர்கள் பின்பற்றுவது இல்லை.

தற்போது மாவட்டம் முழுவதும் பரவலான மழை பெய்து வருவதால் தேயிலை மகசூல் அதிகரித்துள்ளது. இதனால் ஏல மையங்களுக்கு வரும் தேயிலைத் தூளின் வரத்தும் கூடுதலாகியுள்ளது.

இதனால் 30 சதவிகித தேயிலைத் தூள் தேக்கம் அடைவதுடன் அதன் விலையும் குறைந்து வருகிறது. இதன் காரணமாக பசுந்தேயிலைக்கு உண்டான விலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இந்த வாரம் சாதாரண ரக பசுந்தேயிலை கிலோ ரூ. 10-க்கும், நடுத்தர ரகம் ரூ. 15-க்கும், உயர் ரகம் ரூ. 18-க்கும் விற்பனையானது. மகசூல் அதிகரித்து வரும் நிலையில் பசுந்தேயிலையின் விலை குறைந்துள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

### காளான் வளர்ப்பு: வேளாண் கல்லூரி மாணவிகள் செயல்விளக்கம்

ஒருங்கிணைந்த பண்ணை முறையில் காளான் வளர்ப்பு குறித்து, கோவை வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவிகள், கோபியில் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

கோபிசெட்டிபாளையத்திற்கு உள்பட்ட மூன்று ஒன்றியங்களில், கோவை வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் கிராமத் தங்கல் திட்டத்தில் அடிப்படையில் பல்வேறு களப்பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதில், இயந்திர நடவுப் பணி, வாழைகளின் நேர்த்தி, கழிவைக்கொண்டு உரம் தயாரித்தல், வீட்டுத் தோட்டம் அமைப்பது, விதை நேர்த்தி செய்வது, மண் பரிசோதனை செய்வது போன்ற அனைத்து வகையான விவசாய செயல்பாடுகளிலும் இவர்கள் விவசாயிகளுக்கு பல்வேறு உதவிகள் செய்து வருகின்றனர்.

டி.என்.பாளையம் ஒன்றியத்தில் தங்கியுள்ள இம்மாணவிகள் 9 பேர் கோபியை அடுத்துள்ள காளியூர் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தில் ஒருங்கிணைந்த பண்ணை முறையில் காளான் வளர்ப்பு குறித்து செயல்விளக்கம் செய்து காண்பித்தனர்.

இதுகுறித்து வேளாண்மை பல்கலைக்கழக மாணவிகள் கூறியது:

வைக்கோல் மூலம் காளான் வளர்ப்பு செய்தால் விவசாயிகளுக்கு கூடுதல் வருவாய் கிடைக்கும். மேலும், காளான் வளர்ப்பு மூலம் ஒரு விவசாயிக்கு மாதம் ரூ.ஆயிரம் முதல் ரூ. 5 ஆயிரம் வரை கூடுதல் லாபம் பெறமுடியும். காளான் வளர்க்க அதிக நேரம் செலவிடத் தேவையில்லை, அதிக முதலீடும் செய்யத் தேவையில்லை என்றனர்.

மேலும், ஒருங்கிணைந்த பண்ணை முறையில் தேனீ வளர்ப்பு, மீன் வளர்ப்பு, புறா மற்றும் ஆடு கோழிகள் வளர்ப்பினால் வருவாய் அதிகரிப்பு மட்டுமின்றி விவசாயத்திற்கு தேவையான உரங்கள் கிடைக்கவும் பயிர்களில் மகரந்த சேர்க்கை அதிகளவில் ஏற்பட்டு கூடுதல் மகசூல் பெறவும் முடியும் என விவசாயிகளுக்கு மாணவிகள் எடுத்துரைத்தனர்.

**எஸ்.வி.மங்கலத்தில் மரக்கன்று நடும் விழா**

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி அருகே எஸ்.வி.மங்கலத்தில் டாக்டர்.அப்துல்கலாம் பிறந்தநாளையொட்டி மரக்கன்று நடும் விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

எஸ்.வி.மங்கலம் ஒளி அமைப்பு சார்பில் நடைபெற்ற விழாவுக்கு ஊராட்சித் தலைவர் காந்திதாஸ் தலைமை வகித்தார். ஊர் அம்பலகாரர் காந்தி முன்னிலை வகித்தார். அய்யனார் கோயில் செல்லும் வழி மற்றும்

இந்திரா நகர் ஆகிய பகுதிகளில் மரக்கன்றுகள் நடும் பணியை காவல் ஆய்வாளர் முகமது நசீர் தொடக்கிவைத்தார். 200க்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடப்பட்டன. நிகழ்ச்சியில் அ.காளாப்பூர் உயர்நிலைப்பள்ளி பசுமைப்படை இயக்கத்தினர், ஊராட்சி மகளிர் கூட்டமைப்பினர் கலந்து கொண்டனர்.

**கொடைக்கானலில் மேகமூட்டத்துடன் மழை**

கொடைக்கானலில் மழை பெய்து மேகமூட்டம் அதிகமாக இருந்ததால், சுற்றுலா இடங்களைப் பார்க்க முடியாமல் பயணிகள் ஏமாற்றமடைந்தனர். கொடைக்கானலில் சனிக்கிழமை இரவு முதல் ஞாயிற்றுக்கிழமை வரை விட்டு விட்டு மழை பெய்தது. இந்த மழையால், நீர்நிலைகளில் தண்ணீர் வரத்து தொடங்கியுள்ளது. இதனால், வெள்ளி நீர்வீழ்ச்சி, அஞ்சுவீடு அருவி, எலிவால் அருவி, புல்லாவெளி அருவி, வட்டக்கானல் அருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது.எனவே, அடிவாரப் பகுதிகளான பழனி, பெரியகுளம், மஞ்சளாறு, வத்தலகுண்டு ஆகிய இடங்களில் தண்ணீர் பிரச்னை குறைய வாய்ப்புள்ளது. விவசாயத்துக்கும் தேவையான தண்ணீர் கிடைத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர். ஞாயிற்றுக்கிழமை சாரல் மழையுடன் மேகமூட்டம் அதிகமாக நிலவியதால், சுற்றுலா இடங்களைப் பார்க்க முடியாமல் பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர் இதனால், கடந்த 2 நாள்களாக சுற்றுலாப் பயணிகளின் வருகை கணிசமாகக் குறைந்துள்ளது.

**வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தும் திட்டம்: எதிர்ப்பு தெரிவித்து அக்.23 இல் போராட்டம்**

வேளாண் இயந்திரங்கள் பயன்படுத்தும் திட்டத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, மயிலாடுதுறையில் அக்டோபர் 23 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என, விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவர் ஏ. லாசர் தெரிவித்துள்ளார்.

அகில இந்திய விவசாயத் தொழிலாளர்கள் சங்கத்தின் பெண் விவசாயத் தொழிலாளர்களின் மாநில அமைப்புக் குழு கூட்டம், திண்டுக்கல்லில்

சனிக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் ஜி. லதா தலைமை வகித்தார். இதில், விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாநிலத் தலைவரும், சட்டப்பேரவை உறுப்பினருமான ஏ. லாசர், பொதுச் செயலர் ஜி. மணி ஆகியோர் சிறப்பு அழைப்பாளராகக் கலந்துகொண்டனர்.

பின்னர், மாநிலத் தலைவர் ஏ. லாசர் செய்தியாளர்களிடம் தெரிவித்தது: காவிரி நீர் உரிய நேரத்தில் கிடைக்காததால், டெல்டா மாவட்டங்களில் குறுவை சாகுபடி கடுமையாக பாதிக்கப்பட்டது. அதேபோல், சம்பா சாகுபடியும் பாதிக்கப்படும் சூழல்நிலை உள்ளதால், விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை இழப்பு ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில், விவசாயத் தொழிலாளர்களின் பற்றாக்குறையை நீக்கும் வகையில், நிகழாண்டில் ரூ. 80 கோடி மானியத்தில் வேளாண் இயந்திரங்கள் வழங்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது. அதன்படி, 761 நெல்நடவு இயந்திரங்களும், 1,231 விசை களையெடுப்பான்களும் பயன்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால், 95 லட்சம் விவசாயத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும். எனவே, வேளாண் இயந்திரங்களைப் பயன்படுத்தும் திட்டத்தை தமிழக அரசு ரத்து செய்யவேண்டும். இதனை வலியுறுத்தி, மயிலாடுதுறையில் வரும் 23 ஆம் தேதியும், அதனைத் தொடர்ந்து திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் தமிழகம் முழுவதிலும் போராட்டம் நடத்தப்படும். தற்போது, மேக்கேதாட்டு அணை கட்டும் முயற்சியில் கர்நாடகம் ஈடுபட்டுள்ளது. காவிரி பிரச்னைக்கு உரிய தீர்வு ஏற்படுத்த வேண்டும். விவசாயம் இல்லாத நேரத்தில், 100 நாள் வேலை திட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்றார் அவர்.

**வைகை அணை வனத்துறை நர்சரியில் இலவச மரக்கன்றுகள்**

ஆண்டிபட்டி அருகே வைகை அணையில் உள்ள வனத்துறை நர்சரியில் பல்வேறு வகை மரக்கன்றுகள் வழங்கப்படுகின்றன.

தமிழக முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு வனத்துறை சார்பில், முதல்வர் விரிவான மரக்கன்றுகள் வளர்க்கும் திட்டத்தின்படி, தொழிற்சாலைகள், கல்லூரி, பள்ளி மற்றும் கோயில்களில் மரக்கன்றுகள் நடப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின்படி, வனத் துறையினர் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு நேரடியாகச் சென்று ஆய்வுசெய்து, மரக்கன்றுகளை நட்டு வருகின்றனர்.

ஆண்டிபட்டி பகுதியில் நடுவதற்காக வைகை அணை வனத்துறை நர்சரியில், வேம்பு, புங்கன், நாவல், ஆல், அரசு மற்றும் பல்வேறு மரக்கன்றுகள் தயார் நிலையில் உள்ளன. தங்களது பகுதியில் மரக்கன்றுகளை நட விருப்பம் உள்ளவர்கள், ஆண்டிபட்டி அருகே டி.ராஜகோபாலன்பட்டியில் உள்ள வனத்துறை அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம் என, வனத் துறையினர் தெரிவித்தனர்.

**அக்.28 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

சிவகங்கை மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் கூட்டம் அக். 28 புதன்கிழமை காலை 11 மணிக்கு சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

மாவட்டத்தின் அனைத்துத்துறை உயர் அலுவலர்களும் பங்கேற்கும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள விவசாயிகள் கலந்து கொண்டு விவசாயம் சார்ந்த குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் ச. மலர்விழி தெரிவித்துள்ளார்.

**வட கிழக்கு பருவ மழை தாமதம்?**

தமிழகத்தில் அதிக மழையைத் தரக் கூடிய வட கிழக்கு பருவ மழை இந்தாண்டு சற்று தாமதமாக தொடங்கும் என்று வானிலை ஆய்வு நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நாடு முழுவதும் அதிக மழையைத் தரும் தென் மேற்கு பருவ மழை இன்னும் 2 அல்லது 3 நாள்களில் முடிவடையும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேற்கு, வடக்கு பகுதிகளில் தென் மேற்கு பருவ மழை முடிவடைந்துள்ளது. கிழக்கு, வட கிழக்கு பகுதிகளிலும் தென்னிந்தியாவில் ஒரு சில இடங்களிலும் இது நீடித்து வருகிறது.

இந்த நிலையில், இன்னும் 2 அல்லது 3 நாள்களில் கிழக்கு, தென்னிந்திய பகுதிகளில் தென் மேற்கு பருவ மழை முடிவடைவதற்கு சாத்தியமான சூழல் நிலவுவதாக இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த ஆண்டு தென் மேற்கு பருவ மழை 5 நாள்கள் தாமதமாக ஜூன் 5-ஆம் தேதி தொடங்கியது.

ஜூன் முதல் செப்டம்பர் மாத இறுதி வரை நாடு முழுவதும் 760.6 மி.மீ மழை பெய்துள்ளது. இது சராசரியைவிட 14 சதவீதம் குறைவாகும்.

அக்டோபர் 1-ஆம் தேதி முதல் 15-ஆம் தேதி வரை நாட்டில் சராசரியாக 27.4 மி.மீ மழை பெய்துள்ளது.

வழக்கமாக வட கிழக்கு பருவ மழை அக்டோபர் 21-ஆம் தொடங்கும். சில ஆண்டுகளில் சற்று முன்னதாகவும் சில ஆண்டுகளில் சற்று தாமதமாகவும் தொடங்கும்.

ஆனால் இந்தாண்டு சற்று தாமதமாக தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதுகுறித்து அதிகாரப்பூர்வ தகவல் ஏதும் இதுவரை வெளியாகவில்லை.

இருப்பினும், வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: தென் மேற்கு பருவமழை இன்னும் 2 அல்லது 3 தினங்களில் முடிவடையும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் அது முடிந்த உடனேயே வட கிழக்கு பருவமழை தொடங்கும் என்று கூற முடியாது. அடுத்த மூன்று நாள்களில் கண்டிப்பாக தொடங்காது. இருப்பினும் விரைவில் தொடங்க வாய்ப்புள்ளது என்றனர்.

## 2,900 மூட்டை மஞ்சள் ரூ.1¼ கோடிக்கு ஏலம்




திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் 2,900 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 45 லட்சத்திற்கு ஏலம் போனது.

மஞ்சள் ஏலம்

நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு கூட்டுறவு சங்கத்தில் வாரந்தோறும் சனிக்கிழமை மஞ்சள் ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்முடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்தி வேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய இடங்களில் இருந்து விவசாயிகள் 2,900 மூட்டை மஞ்சளை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.இந்த மஞ்சளை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை மற்றும் சேலம் ஆகிய இடங்களில் இருந்து 30-க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு

மஞ்சளை ஏலம் எடுத்து சென்றனர்.

ரூ.1 கோடி 45 லட்சம்

இந்த ஏலத்தில் விராலி ரகம் குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 699 முதல் ரூ. ஆயிரத்து 299 வரையும், கிழங்கு ரகம் ரூ. ஆயிரத்து 579 முதல் ரூ.8 ஆயிரத்து 199 வரையும், பனங்காளி ரகம் ரூ.6 ஆயிரத்து 800 முதல் ரூ.10 ஆயிரத்து 609 வரையும் விற்பனை செய்யப்பட்டது. மொத்தம் 2,900 மூட்டை மஞ்சள் ரூ.1 கோடியே 45 லட்சம் ஏலம் போனதாக கூட்டுறவு சங்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

## ஜவ்வரிசி ஆலைகளில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் ஆய்வு 177 மூட்டைகளை விற்பனை செய்ய தடை



ராசிபுரம், வெண்ணந்தூர் பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி ஆலைகளில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் திடீர் ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின் போது சந்தேகத்திற்கு உரிய 177 மூட்டை ஜவ்வரிசி விற்பனைக்கு தடை விதிக்கப்பட்டது.

அதிகாரிகள் ஆய்வு

நாமக்கல் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி அறிவுறுத்தலின்பேரில், உணவுபாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத்துறை, மாவட்ட நியமனஅலுவலர் டாக்டர் தமிழ்ச்செல்வன் தலைமையில்,

உணவுப்பாதுகாப்பு அலுவலர்கள் சிவசுப்ரமணியன், ராமச்சந்திரன், சண்முகம், சதீஸ்குமார் மற்றும் ராமசாமி ஆகியோர் அடங்கிய குழு ராசிபுரம், வெண்ணந்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப்பகுதிகளில் உள்ள ஜவ்வரிசி உற்பத்தி ஆலைகளில் திடீர் ஆய்வு செய்தனர். சுமார் 15 ஜவ்வரிசி ஆலைகளை ஆய்வு செய்ததில், அலவாய்பட்டி என்ற இடத்தில் உள்ள ஒரு சேகோ பேக்டரியில் சந்தேகத்தின் அடிப்படையில் உணவு மாதிரி எடுத்து உணவுப்பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது. அதிலிருந்த 51 ஜவ்வரிசி மூட்டைகளும் தனிஅறையில் எடுத்து வைத்து பூட்டப்பட்டது.

விற்பனைக்கு தடை

இதேபோல் அரமத்தாம்பாளையம் என்ற இடத்தில் உள்ள ஒரு சேகோ பேக்டரியிலும் சந்தேகத்தின் அடிப்படையில் உணவுமாதிரி எடுத்து உணவுப்பகுப்பாய்விற்கு அனுப்பப்பட்டது. அங்கும் 96 ஜவ்வரிசி மூட்டைகள் தனிஅறையில் எடுத்து வைத்து பூட்டப்பட்டது. மேலும், மின்னக்கல் பகுதியில் ஒரு சேகோ பேக்டரியில் ஆய்வு செய்த அதிகாரிகள் சந்தேகத்தின் அடிப்படையில், உணவுமாதிரி எடுத்து உணவுப்பகுப்பாய்விற்கு அனுப்பினர். அங்கு இருந்த 30 ஜவ்வரிசி மூட்டைகளும் தனி அறையில் எடுத்து வைத்து பூட்டப்பட்டன. பகுப்பாய்வு அறிக்கை கிடைக்கும் வரை அந்த நிறுவனங்களில்இருப்பில் வைக்கப்பட்டு உள்ள 177 ஜவ்வரிசி மூட்டைகளை விற்கவோ, வேறு பயன்பாட்டிற்கு உட்படுத்தவோ கூடாது என்றும் எச்சரிக்கப்பட்டது.

கடும் நடவடிக்கை

பகுப்பாய்வு அறிக்கையில் உணவு மாதிரிகளில் தவறுகள் இருப்பது கண்டறியப்பட்டால் சம்மந்தப்பட்ட ஜவ்வரிசி ஆலை உரிமையாளர்கள் மீது உணவுப்பாதுகாப்பு தரங்கள் சட்டத்தின்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது.

மேலும் இந்த ஆய்வின் போது ஜவ்வரிசி உற்பத்தி ஆலைகள் நீதிமன்ற

உத்திரவின்படி ஜவ்வரிசி உற்பத்தி செய்கின்றார்களா ? ஈரகிழங்குமாவு வாங்குவது அல்லது விற்பது போன்ற செயல்களில் ஈடுபடுகிறார்களா? என்றும் ஆய்வு செய்தனர். மேலும், ஜவ்வரிசி உற்பத்தியில் மரவள்ளி கிழங்கு தோலினை முழுமையாக நீக்கி ஜவ்வரிசி தயாரிக்கின்றார்களா? என்றும் ஆய்வு செய்யப்பட்டது.

அத்துடன் ஜவ்வரிசி உற்பத்தியில் மக்காச்சோளமாவு கலப்படம் மற்றும் ரசாயனக்
கலப்படம் செய்யப்படுகின்றதா ? எனவும், ஆலைக்குள் ரசாயன கேன்கள் இருக்கின்றதா ? எனவும் ஆய்வு செய்யப்பட்டது.

அழுக்கு மாவு கண்டுபிடிப்பு

மேலும், ஜவ்வரிசி தயாரிக்க அழுக்கு மாவை பயன்படுத்துகிறார்களா ? என ஆய்வு செய்த அதிகாரிகள், ஒருசில இடங்களில் அழுக்கு மாவு இருப்பதை கண்டறிந்தனர். அவற்றை பயன்படுத்த கூடாது எனவும், அதை காயவைத்து பிற உபயோகத்திற்கு மட்டுமே விற்கவேண்டும் எனவும் அறிவுறுத்தப்பட்டது. அவ்வாறு இல்லையெனில், உணவுப்பாதுகாப்பு தரசட்டத்தின்படி நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்பட்டது.

## மோகனூர், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் நடப்பாண்டு 3.70 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு



மோகனூர்,

மோகனூர், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2015–16–ம் ஆண்டிற்கான அரவைப் பருவத்தில் சுமார் 3.70 லட்சம் டன்கள் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என்று கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

அரவைப்பணி தொடக்கம்

மோகனூரில் உள்ள சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2015–16–ம் ஆண்டிற்கான கரும்பு அரவை செய்யும் பணி தொடங்கப்பட்டது. விழாவில் ஆலை மேலாண்மை இயக்குனர் பிரியா வரவேற்றார். நிர்வாகக்குழு தலைவர் சிவபாக்கியம் தலைமை தாங்கினார். நிர்வாகக்குழு துணைத் தலைவர் கருப்பண்ணன், மணி, காளியம்மாள் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கி கரும்பு அரவை எந்திரத்தில் கரும்புக்கட்டுகளை இட்டு கரும்பு அரவைப்பணியினை தொடங்கி வைத்தார். பின்னர் இதுகுறித்து மாவட்ட கலெக்டர் பேசியதாவது:–

மோகனூர், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2015–16–ம் ஆண்டிற்கான கரும்பு அரவைப்பணி தொடங்கி வைக்கப்பட்டு உள்ளது. இந்த அரவைப் பருவத்தில் சுமார் 3.70 லட்சம் டன்கள் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதற்காக 1,783 ஏக்கர் நடவு கரும்பும், 2,571 ஏக்கர் கட்டைக் கரும்பும் என ஆக மொத்தம் 4,354 ஏக்கர் கரும்பு அரவைக்காக இந்த ஆலைப் பகுதியில் பதிவு செய்யப்பட்டு உள்ளது.

பயன்பெற வேண்டும்

கடந்த ஆண்டு (2014–15) கரும்பு அரவைப் பருவத்தில் இந்த ஆலையில் 8.69 சதவீத சர்க்கரை கட்டுமானத்தில் 3.59 லட்சம் டன்கள் கரும்பு அரவை செய்யப்பட்டு உள்ளது. ஆலை அரவைக்கு அனுப்பப்படும் கரும்பிற்கான மத்திய அரசு அறிவித்த கிரயத் தொகை கரும்பு

கட்டுப்பாட்டு சட்டப்படி கரும்பு வெட்டி அனுப்பிய 14–ம் நாள் அங்கத்தினர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கப்படும்.

மோகனூர், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை 2014–15–ம் ஆண்டுக்கு தேசிய அளவில் சிறந்த தொழில் நுட்பத்திறனுக்கான இரண்டாம் பரிசை பெற்றுள்ளது. எனவே கரும்பு விவசாயிகள் மோகனூர், சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலை அரவைக்குத் தேவையான கரும்பினை அனுப்பி ஆலை நல்லமுறையில் கரும்பு அரவை செய்து இந்த ஆண்டும் தேசிய அளவிலும், மாநில அளவிலும் சிறந்து விளங்க தொடர்ந்து முழு ஒத்துழைப்பு வழங்குவதோடு ஆலையும் அதன் மூலம் ஆலையின் அங்கத்தினர்களும் பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது. இவ்வாறு கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய அ.தி.மு.க. செயலாளர் கருமண்ணன், நகர செயலாளர் தங்கமுத்து, விவசாய சங்க நிர்வாகிகள் அஜீதன், நவலடி, ராமலிங்கம், ராமசாமி, ராஜாகண்ண்ன, விஜயன், துரைசாமி மற்றும் கரும்பு அலுவர்கள், அனைத்து பணியாளர்கள் மற்றும் விவசாயி சங்க பிரதிநிதிகள், கரும்பு விவசாயிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். முடிவில் கரும்பு பெருக்கு அலுவலர் அருளானந்தசாமி நன்றி கூறினார்.

## மதுரையில் சீசன் முடிவில் சிம்லா ஆப்பிள் டெல்லி ஆப்பிள் வரத்தொடங்கியது



உலகில் அதிக மக்களால் விரும்பி உண்ணப் படும் ஒரு பழம் என்றால், அது ஆப்பிள் தான். உலகம் முழுவதும் ஆப்பிள் பல வகைகளில் இருந்தாலும், இந்தியாவின் இமயமலைப் பகுதிகளில் விளையும் இமாச்சல் ஆப்பிள் தான் மிகவும் சுவையானது. அந்த மாநிலத்தில் விளையும் அனைத்து ஆப்பிள்களையும் நாம் சிம்லா ஆப்பிள்கள் என்கிறோம். அப்படியல்ல; அந்த மாநிலத்தில் சிம்லாவை விட, பழங்குடி பகுதிகளில் தான் அதிக அளவில் ஆப்பிள் விளைகிறது.

குறிப்பாக கல்பா, நாக்கோ, டாபோ, கிப்பர் போன்ற பழங்குடி பகுதிகள் இமயமலையின் அங்கமாக உள்ளன. இந்த பகுதிகளுக்கு செல்லும் பாதைகள் மிகவும், ஆபத்தானதாக இருப்பதால் சுற்றுலா பயணிகள் அங்கு செல்ல ஆர்வம் காட்டுவதில்லை. இதனால் வெளிமனிதர்களின் வாசம் இல்லாமல், கலப்படம் இல்லாமல் ஆப்பிள் விளைகிறது. எனவே தான் இதன் சுவை மிக அற்புதமாக இருக்கும்.

செடி போன்ற மரம்

மற்ற வகை ஆப்பிள்கள் நீண்ட நாட்கள் பதப்படுத்தி, வண்ணம் மெருகூட்டப்பட்டு தான் விற்பனை செய்யப்படுகின்றன. ஆனால் இமாச்சல் ஆப்பிள், சீசன் காலமான ஆகஸ்டு மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை இயற்கை சுவையுடன் கிடைப்பது அதன் சிறப்பு.

ஆப்பிள் மரம் சிறிய இலையுதிர் மரம் ஆகும். அது 5 மீட்டர் முதல் 10 மீட்டர் வரை உயரம் வளரும். பூ-காயாகி, காய்-கனியாகி என்பது போல முதலில் 5 இதழ்களுடைய வெள்ளைப் பூக்களாக பூக்கும். அதன்பின் சிறிய காயாகி, கனியாகும். இந்த பூவையும், கனியையும் உண்டால் கூட ஆப்பிள் உண்ட சுவை இருக்கும்.

சீசன் முடிவு

மதுரையை பொறுத்தவரை இமாச்சல் (சிம்லா) ஆப்பிள் வரத்து தான் அதிகம். இந்த சீசன் இந்த மாதத்துடன் அங்கு முடிவடைகிறது. எனவே மீண்டும் இந்த ஆப்பிள்களை உண்ண வேண்டுமானால் அடுத்த ஆண்டு வரை பொறுத்திருக்க வேண்டும்.இதுகுறித்து வியாபாரிகள் சிலர் கூறும்போது, ‘‘நமக்கு ஆண்டு முழுவதும் ஆப்பிள்கள் கிடைக்கும். ஆனால் ஐஸ்கிரீம் சுவை கொண்ட சிம்லா ஆப்பிள் சீசன் இந்த மாதத்துடன் முடிகிறது. இனி இங்கு டெல்லி, வாஷிங்டன் ஆப்பிள்கள் தான் விற்பனைக்கு வரும். அவற்றின் விலையும் அதிகம் இருக்கும்’’ என்றனர்.

சிம்லா ஆப்பிளைப்பொறுத்தவரை கடந்த வாரம் வரை கிலோ ரூ.60க்கு கூட கிடைத்தது. ஆனால் தற்போது வரத்து சற்று குறைந்து விட்டது. எனவே விலை கூடி விட்டது. இப்போது டெல்லி ஆப்பிள் மதுரைக்கு வரத்தொடங்கி விட்டது. இது கிலோ ரூ.90, 100 என்ற விலைகளில் விற்கப்படுகிறது.

## மதுரை மழை நிலவரம்



கடந்த சில நாட்களாக மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை, விருதுநகர் மாவட்டங்களில் கடந்த ஒரு வாரமாக மழை இல்லாமல் வெயில் காணப்பட்டது.

இந்தநிலையில் ராமநாதபுரம், ராமேசுவரம், கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி உள்ளிட்ட ஊர்கள் உள்பட மாவட்டம் முழுவதும் நேற்று காலை மேகமூட்டமாக காணப்பட்டது. இதைத்தொடர்ந்து சாரல் பெய்தது. சிவகங்கை மாவட்டத்திலும் இதே நிலை இருந்தது.

விருதுநகர் மாவட்டத்தில் காலையில் வெயில் இருந்தது. மதியத்துக்கு மேல் மேகங்கள் திரண்டு வந்து பரவலாக மழை பெய்தது. மதுரை நகர் மற்றும் புறநகர் பகுதியில் நேற்று காலை வழக்கம் போல் வெயில் சுள்ளென்று இருந்தது. ஆனால் நேரம் செல்ல செல்ல வானம் மேகமூட்டமாக மாறி வெயிலின் தாக்கம் குறைந்தது. இதைத்தொடர்ந்து மதியம் 2.30 மணியளவில் சாரலுடன் மழை பெய்யத் தொடங்கியது. தொடர்ந்து பலத்த மழையும் சாரலுமாக இருந்தது. இதனால் சற்று குளிர்ச்சியாக இருந்தது.

## கூடலூர் தோட்டக்கலை பண்ணை பூங்காவுக்கு வண்ணத்துப்பூச்சிகள் வரத்து அதிகரிப்பு



கூடலூர்

கூடலூர் அருகே தோட்டக்கலை பண்ணையில் செயல்பட்டு வரும் பூங்காவுக்கு வண்ணத்துப்பூச்சிகளின் வரத்து அதிகரித்துள்ளது.

பூங்கா

கேரள– கர்நாடகா மாநிலங்களின் எல்லையில் கூடலூர் அமைந்துள்ளது. இதனால் தினமும் ஏராளமான சுற்றுலா பயணிகள் கூடலூர் வழியாக ஊட்டிக்கு சென்று வருகின்றனர். நீண்ட தொலைவில் இருந்து வரும் சுற்றுலா பயணிகள் கூடலூர் பகுதியில் சுற்றுலா திட்டங்கள் உள்ளதா? என விசாரிக்கிறார்கள். ஆனால் சுற்றுலா திட்டங்கள் எதுவும் இல்லாததால் ஏமாற்றம் அடைந்து வந்தனர்.

இதையொட்டி தமிழக அரசு உத்தரவின் பேரில் கூடலூர் தோட்டக்கலைத்துறைக்கு சொந்தமான பண்ணையில் கடந்த ஜூன் மாதம் 25 சென்ட் நிலத்தில் ரூ.20 லட்சம் செலவில் வண்ணத்துப்பூச்சி பூங்கா திறக்கப்பட்டது. இதற்காக பாலிதீன் கொண்டு மூடப்பட்ட 2 ராட்சத குடில்கள் அமைக்கப்பட்டன. மேலும் வண்ணத்துப்பூச்சிகளுக்கு விருப்பமான ஜனியா, சூரியகாந்தி, அஜிரேட்டம், வெர்பினா, சப்னேரியா குரோட்டேரியா, மொட்டு ரோஜா, சால்வியா உள்பட பல்வேறு ரக மலர் செடிகள் நடவு செய்யப்பட்டன.

வரத்து அதிகரிப்பு

இதேபோல் வண்ணத்துப்பூச்சிகள் உள்ள குடில்களில் சுற்றுலா பயணிகள் கண்டு ரசிக்கும் வகையிலும், வண்ணத்துப்பூச்சிகளுக்கு தேவையான காலநிலை நிலவுகின்ற வகையிலும் 2 செயற்கை நீரூற்றுகள் மற்றும் புல்வெளி தளங்கள் அமைக்கப்பட்டன. ஆனால் வண்ணத்து பூச்சிகள் எதுவும் இல்லாமல் காணப்பட்டது. இதனால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்து வந்தனர்.

இந்த நிலையில் மோனார்க், எல்லோடெய்ல், பிளாக்ஜ உள்பட சில வகையை சேர்ந்த வண்ணத்து பூச்சிகள் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஒரே இடத்தில் பல வண்ணத்துப்பூச்சிகளை சுற்றுலா பயணிகள் கண்டித்து ரசித்து செல்கிறார்கள். இதேபோல் பள்ளிக்கூட மாணவ–மாணவிகள் கல்வி சுற்றுலாவாக வண்ணத்துப்பூச்சி பூங்காவுக்கு அழைத்து வரப்படுகின்றனர். வண்ணத்துப்பூச்சிகளின் வரத்து அதிகரித்து

உள்ளதால் சுற்றுலா பயணிகளும், உள்ளூர் மக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

<u>இனப்பெருக்கம்</u>

இது குறித்து தோட்டக்கலை துறை அதிகாரிகள் கூறும் போது, தற்போது, பூங்காவுக்கு வண்ணத்துப்பூச்சிகள் வரத்து அதிகரித்துள்ளது. மேலும் வண்ணத்துப்பூச்சிகள் பிடித்தமான தாவரங்களில் இனப்பெருக்கம் செய்து வருகின்றன. இனி வரும் காலங்களில் இன்னும் அதிகளவு வண்ணத்துப்பூச்சிகள் பூங்காவில் வாழ்விடங்களை அமைத்து கொள்ள வாய்ப்புகள் உள்ளன என்று தெரிவித்தனர்.

## மண்வளத்தை பாதுகாக்க பழங்குடியின மக்கள் பாரம்பரிய விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும்: ஆராய்ச்சி மைய இயக்குனர் பேச்சு




<u>ஊட்டி</u>

மண்வளத்தை பாதுகாக்க பழங்குடியின மக்கள் தங்களது பாரம்பரிய விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்று பயிற்சி முகாமில் பழங்குடியின ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் சுப்பிரமணியம் கூறினார்.

<u>பயிற்சி முகாம்</u>

ஊட்டியில் மத்திய மண் மற்றும் நீர் வள ஆராய்ச்சி மையம் இயங்கி வருகிறது. இந்த மையத்தின் சார்பில் நீலகிரியில் உள்ள பழங்குடியின

மக்களுக்கு தேயிலை மற்றும் காய்கறி சாகுபடியில் மண் மற்றும் நீர் வளத்தை பாதுகாப்பு முறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் மையத்தில் பழங்குடியின மக்களுக்கு பயிற்சி முகாம் நடைபெற்றது. இதற்கு மைய தலைவர் பால் சிங் கோலா தலைமை தாங்கினார். அப்போது அவர் பேசும் போது கூறியதாவது:–

பழங்குடியினருக்கு பல்வேறு நலத்திட்டங்களை மத்திய, மாநில அரசுகள் செய்து வருகின்றன. எனவே இதுபோன்ற நலத்திட்டங்களை செயல்படுத்த பழங்குடியின மக்கள் தாங்களாகவே முன்வந்து சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். மேலும் இந்த திட்டங்களை செயல்படுத்துவது குறித்து தங்களின் ஆலோசனைகளையும் கூறலாம். இதன் மூலம் நலத்திட்ட பணிகளை நல்ல முறையில் செயல்படுத்த முடியும் என்று தெரிவித்தார்.

<u>பாரம்பரிய பயிர்கள்</u>

தொடர்ந்து பழங்குடியின ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் சுப்பிரமணியம் பேசும் போது கூறியதாவது:–

பழங்குடியின மக்கள் தங்களது பாரம்பரிய விவசாயத்தை மேற்கொண்டாலே மண் வளத்தை பாதுகாக்க முடியும். தற்போது கால மாற்றம் காரணமாக பழங்குடியின மக்களின் பாரம்பரிய பயிர்கள் அழியும் நிலை ஏற்பட்டு உள்ளது. அதுபோன்ற பயிர்களை மீண்டும் பழங்குடியின மக்கள் பயிரிட வேண்டும்.

இங்கு அளிக்கப்படும் பயிற்சி மூலம் கற்றுக்கொண்ட யுக்திகளை பிற விவசாயிகளுக்கு நீங்கள் எடுத்து கூற வேண்டும். மத்திய பழங்குடியின அமைச்சகம் தற்போது போதுமான நிதி ஒதுக்கி வருகிறது. இதனை பழங்குடியின மக்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## பெரம்பலூர் மாவட்டத்தில் 35 ஆயிரத்து 746 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி



பெரம்பலூர் மாவட்டத்தில் 35 ஆயிரத்து 746 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

மக்காச்சோளம் சாகுபடி

பெரம்பலூர் மாவட்டத்தில் தொடர்மழை பெய்து வருவதால் உழவுப்பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் பெரம்பலூர் மாவட்டத்தில் முக்கிய பயிரான மக்காச்சோளம் அதிக அளவில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு பருத்தி அதிக ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது. பருத்திக்கு உரிய விலை கிடைக்காததாலும், பராமரிப்பு செலவுகள் அதிகரித்ததாலும், விவசாயிகள் பருத்தி சாகுபடியில் இருந்து மக்காச்சோளம் சாகுபடிக்கு மாறி உள்ளனர்.

பராமரிப்பு செலவு குறைவு

பெரம்பலூர் மாவட்டத்தில் பெரும்பாலான நிலங்கள் மானாவாரியாக இருப்பதாலும், 4 மாதங்களில் முற்றிய கதிர்களாக அறுவடை செய்யப்படும் மக்காச்சோளத்திற்கு பராமரிப்பு செலவு குறைவு என்பதாலும் ஆண்டுக்கு ஆண்டு மக்காச்சோளம் சாகுபடி பரப்பு அதிகரித்து வருகிறது. நாமக்கல் மாவட்டத்தில் இருந்து கோழி மற்றும் கால்நடை தீவனத்திற்காக மக்காச்சோளம் கொள்முதல் அதிகம் செய்யப்பட்டு வருவதால், வேப்பந்தட்டை, வேப்பூர் வட்டாரங்களில் பெரும்பாலான விவசாயிகள் என்.கே. டி.கே.சி. தானியா, பயனியர் போன்ற ரக மக்காச்சோளத்தை ஆர்வத்துடன் பயிரிட்டு வருகின்றனர்.

35 ஆயிரத்து 746 எக்டேர் பரப்பளவில்...

நடப்பு பருவத்தில் 35 ஆயிரத்து 746 எக்டேர் பரப்பளவில் மக்காச்சோளம் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டில் இதே நேரத்தில் 35 ஆயிரத்து 300 எக்டேர் பரப்பளவில் மட்டுமே மக்காச்சோளம் சாகுபடி நடந்தது. இது தவிர நெல் 516 எக்டேர் பரப்பளவிலும், பருத்தி 18ஆயிரத்து 482 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. வெங்காயம் ஆயிரத்து 919 எக்டேர் பரப்பளவிலம், கரும்பு 4ஆயிரத்து 859 எக்டேர் பரப்பிலும், மரவள்ளிக்கிழங்கு ஆயிரத்து 720 எக்டேர் பரப்பளவிலும் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது என்று வேளாண்மைத்துறையினர் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 67 அடியாக குறைந்தது



நீர்வரத்தைவிட தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டு உள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் 67 அடியாக குறைந்தது.

நீர்வரத்து குறைந்தது

தமிழகம் முழுவதும் கடந்த 10 நாட்களாக பரவலாக மழை பெய்தது. குறிப்பாக இந்த மழை சேலம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் உள்ள காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் தீவிரம் அடைந்தது. இதன் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து அதிகபட்சமாக வினாடிக்கு 9 ஆயிரம் கனஅடி வரை வந்தது. இந்த நிலையில் கடந்த 4 நாட்களாக மழை அளவு குறைந்தது. இதனால் மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக குறையத்தொடங்கியது. நேற்று முன்தினம் வினாடிக்கு 5 ஆயிரத்து 763 கனஅடி வீதம் வந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 3 ஆயிரத்து 212 கனஅடியாக குறைந்தது.

தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

அதே நேரத்தில் டெல்டா பாசன பகுதிகளிலும் மழை நின்றதால், பாசனத்திற்கான தண்ணீர் தேவை அதிகரித்துள்ளது. இதன் காரணமாக மேட்டூர் அணையில் இருந்து கடந்த 15-ந் தேதி டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு 9 ஆயிரம் கனஅடியில் இருந்து 12 ஆயிரம் கனஅடியாக அதிகரிக்கப்பட்டு உள்ளது.இதேபோன்று கால்வாய் பாசனத்திற்கு திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு வினாடிக்கு 500 கனஅடியில் இருந்து வினாடிக்கு 800 கனஅடியாக அதிகரிக்கப்பட்டது.

நீர்மட்டம் ஒரு அடி குறைந்தது

அணைக்கு நீர்வரத்து குறைந்து உள்ள நிலையில், அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீரி அளவு அதிகரிக்கப்பட்டு உள்ளதால், மேட்டூர் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.

நேற்று முன்தினம் அணையின் நீர்மட்டம் 68.15 அடியாக இருந்தது. இது நேற்றைய நிலவரப்படி 67.14 அடியாக குறைந்தது. அதாவது, ஒரே நாளில் நீர்மட்டம் ஒரு அடி குறைந்து உள்ளது. நீர்வரத்து மேலும் குறையுமானால் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைய வாய்ப்பு உள்ளது.

## தேனி வாரச்சந்தையில் விற்பனைக்கு குவிந்த நாட்டுக்கோழிகள்



தேனி,

தேனி வாரச்சந்தைக்கு நாட்டுக்கோழிகள் விற்பனைக்காக அதிக அளவில் கொண்டு வரப்பட்டன. கிலோ ரூ.240-க்கு விற்பனை செய்யப்பட்டது.

நாட்டுக்கோழி

நாட்டுக்கோழி இறைச்சி மருத்துவ குணம் கொண்டதாக கருதப்படுகிறது. கை, கால் மற்றும் உடல் பலம் பெறவும், சளியை போக்கவும் நாட்டுக்கோழியை சமைத்து சாப்பிட்டு வருகின்றனர். இதனால் நாட்டுக்கோழிக்கு என்று தனி மவுசு உள்ளது. கடந்த சில ஆண்டுகளில் நாட்டுக்கோழி இறைச்சியின் விலை அதிகரித்து உள்ளது. தற்போது

இறைச்சிக் கடைகளில் ஒரு கிலோ நாட்டுக்கோழி இறைச்சி ரூ.350-க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதே நேரத்தில் தேனி வாரச்சந்தையில் நேற்று ஒரு கிலோ ரூ.240 முதல் ரூ.250 வரை நாட்டுக்கோழிகள் விற்பனை செய்யப்பட்டன.

கிலோ ரூ.240

தேனி வாரச்சந்தைக்கு கடந்த சில ஆண்டுகளுக்கு பிறகு சமீப காலமாக தான் நாட்டுக்கோழிகள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. அதன்படி நேற்று நடந்த வாரச்சந்தையின் போது, அதிக அளவில் நாட்டுக்கோழிகள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டன. ஆயிரக்கணக்கான கோழிகள் சாலையோரம் வைத்து விற்பனை செய்யப்பட்டது. இதனை மக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் சென்றனர். ரூ.240-க்கு வாங்கிய கோழியை இறைச்சிக் கடையில் ரூ.20 முதல் ரூ.30 வரை கொடுத்து அறுத்து, சுத்தம் செய்து வாங்கிச் சென்றனர். கிராமப்புற மக்கள் கோழியை உயிருடன் தங்களின் வீட்டுக்கு வாங்கிச் சென்றனர்.
எடை போட்டு விற்பனை

இதுகுறித்து நாட்டுக்கோழி விற்பனை செய்த வியாபாரி ஒருவரிடம் கேட்ட போது, ‘தேனி மாவட்டத்தில் கம்பம் சுற்றுவட்டார பகுதிகளில் நாட்டுக்கோழிகளை பலர் வீடுகளில் வளர்த்து வருகின்றனர். நாங்கள் கிராமங்களுக்கு சென்று நாட்டுக்கோழிகளை மக்களிடம் இருந்து விலைக்கு வாங்குவோம். அதேபோன்று மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, மேலூர் பகுதிகளில் நடக்கும் சந்தைகளில் இருந்தும் நாட்டுக்கோழிகளை வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வரை நாட்டுக்கோழியை தராசில் வைத்து எடை போட்டது கிடையாது. கையில் தூக்கி பிடித்து, அதன் எடையை உத்தேசமாக கணித்து விலை பேசி விற்று வந்தோம். இப்போது எடை கணக்கில் விற்பனை செய்கிறோம். இறைச்சிக் கடைகளை காட்டிலும் குறைந்த விலைக்கு

விற்பனை செய்வதால் மக்கள் ஆர்வத்துடன் வாங்கிக் செல்கின்றனர்' என்றார்.

## வறட்சியின் பிடியில் கருகிய தென்னை மரங்கள் விளைநிலங்கள் வீட்டு மனைகளாக மாறும் அவலம்



குடிமங்கலம் பகுதியில் வறட்சியின் பிடியில் சிக்கி தென்னை மரங்கள் கருகிவிட்டதால், விளைநிலங்களை வீட்டு மனைகளாக விவசாயிகள் மாற்றி வருகிறார்கள்.

<u>கிணற்று பாசனம்</u>

குடிமங்கலம் அருகே உள்ள பெரியபட்டி ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்பகுதி கிராமத்தை சேர்ந்தவர்கள் விவசாயத்தை பிரதான தொழிலாக கொண்டுள்ளனர். இந்த பகுதி மேற்கு தொடர்ச்சி மலை அருகே இருப்பதால், காற்றும், மழைப்பொழிவும் அதிகம்.

கால்வாய்பாசனம், குளத்து பாசனம் எதுவுமே இப்பகுதிகளில் இல்லை. கிணற்று பாசனத்தை மட்டுமே விவசாயிகள் நம்பியுள்ளனர். இயற்கையிலே ஏற்ற இறக்கத்துடன் இருக்கும் கிராமங்களில், மழை நீரை தேக்கி வைக்க, கிராமங்களை சுற்றிலும், சிறு, சிறு குட்டைகள் உள்ளன. இந்த கிராமங்களில் வழியாக உப்பாறு செல்கிறது.

<u>உப்பாறு</u>

பி.ஏ.பி. வாய்க்காலில் இருந்து அரசூர் மதகு மூலம் உப்பாற்றில் கடந்த காலங்களில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அவ்வாறு திறந்துவிடும் தண்ணீர் ஆற்றில் ஓடும் போது, சுற்றுப்பகுதியில் உள்ள நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து கிணறுகளிலும், குட்டைகளிலும் தண்ணீர் தேங்கும். இதை நம்பி இந்த பகுதி விவசாயிகள் வாழை, தென்னை, கரும்பு போன்றவற்றை விவசாயம் செய்தனர்.

தற்போது 2 மண்டலமாக இருந்த பி.ஏ.பி. பாசனம் 4 மண்டலமாக மாற்றப்பட்டு விட்டதால், உப்பாற்றில் தண்ணீர் திறந்து விட பி.ஏ.பி.பாசன விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் இந்த ஆற்றில் தண்ணீர் இன்றி வறண்டு முட்புதராக காட்சி அளிக்கிறது. குட்டைகளின் நீர் வழிப்பாதைகள் காலப்போக்கில் மூடப்பட்டதால், மழை நீர் தேங்குவதும் தடைபட்டன.

<u>கருகிய தென்னைகள்</u>

குட்டைகள் வறண்டு விட்டதாலும், உப்பாற்றில் தண்ணீர் திறக்கப்படாததாலும், பெரியபட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. ஆயிரம் அடிக்கு கீழ் ஆழ்குழாய் கிணறு அமைத்தாலும், தண்ணீர் கிடைப்பது அரிதாகி விட்டதால், விளை நிலங்கள் அடையாள சின்னங்களாக மாறி வருகின்றன. இந்த பகுதியில் 25 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்ட தென்னை மரங்கள் தண்ணீரின்றி காய்ந்து விட்டன.

இதனால் பல்லாயிரக்கணக்கான தென்னைகளை வெட்ட வேண்டிய நிலை உருவாகி விட்டது. ஒரு சில இடங்களில் தண்ணீர் கிடைத்து தப்பித்த தென்னையும் தற்போது கருக தொடங்கிவிட்டன. வறட்சியின் கோர தாண்டவத்தால் காய்ந்து போன தென்னை மரங்கள் ‘மொட்டை‘யாக காட்சியளித்து வருகின்றன. இதன்காரணமாக பெரும்பாலான விவசாயிகள் தாங்கள் பிள்ளை போல் வளர்த்த

தென்னைகளை வெட்டி, அவற்றை வீட்டுமனைகளாக மாற்றி வருகிறார்கள்.

<u>நிலத்தடி நீர்மட்டம்</u>

மேலும் காய்கறி, பயிர் சாகுபடியை கைவிட்ட ஒரு சில விவசாயிகள், மானாவாரி நிலத்தில், மழைக்காலத்தில் கால்நடை தீவனத்துக்கு சோளம் மட்டுமே பயிரிடுகின்றனர். ஆனால் மழை பொய்த்து சுட்டெரிக்கும் வெயிலில் சோளமும் வளராமல் கருகி விடுவதால், கால்நடை வளர்ப்பும் குறைந்து வருகிறது. இதுதவிர தற்போது வீட்டுக்கு ஒரு ஆழ்குழாய் கிணறு அமைப்பதால், விவசாய பயன்பாட்டுக்கான ஆழ்குழாய்கிணறுகளுக்கு, ஆபத்து அதிகரித்து வருகிறது.

இந்த வடகிழக்கு பருவ காலத்திலாவது மழை பெய்யும் என்ற நம்பிக்கையில் பெரியபட்டி கிராமத்தில் உப்பாற்றங்கரையோரம் உள்ள குட்டையை தூர்வாரி இந்த பகுதி பொதுமக்கள் தயாராக வைத்துள்ளனர். உப்பாற்றில் தண்ணீர் திறந்து, இந்த குட்டையில் தண்ணீரை தேக்கினால் தான், இந்த கிராமத்தை சுற்றி 20 கிலோ மீட்டர் சுற்றளவுக்கு நிலத்தடி நீர்மட்டம் பாதுகாக்கப்படும். எஞ்சியிருக்கும் விவசாய நிலங்களில், பசுமையை பார்க்க முடியும் என்று இந்த பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தாளவாடியில் மானாவாரி நிலங்களில் பயிர்களை காட்டுப்பன்றிகளிடம் இருந்து காக்க மரத்தில் பரண் அமைத்து தீவிர கண்காணிப்பு



தாளவாடி

தாளவாடி மலைப்பகுதிகளில் மானாவாரி நிலங்களில் பயிரிடப்பட்டு உள்ள பயிர்களை காட்டுப்பன்றிகளிடம் இருந்து காக்க மரத்தில் பரண் அமைத்து தீவிரமாக கண்காணிப்பதுடன், அவ்வாறு வரும் பன்றிகளை 'தகர டப்பா' மூலம் ஒலி எழுப்பி விரட்டி வருகின்றனர்.

## பயிர்களை நாசப்படுத்தும் காட்டுப்பன்றிகள்

சத்தியமங்கலம் அருகே உள்ள தாளவாடி மலைப்பகுதி உள்ளது. இங்குள்ளவர்களின் முக்கிய தொழிலே விவசாயம்தான். தாளவாடி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களான முதியனூர், தலமலை, கோடிபுரம், நெய்தாளபுரம், சிக்கள்ளி, கொங்கள்ளி, அருளவாடி, மல்குத்திதொட்டிபுரம் உள்பட பல்வேறு பகுதிகளில் ஆண்டுதோறும் ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் மாதங்களில் மானாவாரி நிலங்களில் விவசாயிகள் ராகி மற்றும் மக்காச்சோளம் ஆகிய பயிர்களை பயிரிடுவது வழக்கம்.

இந்த விவசாய நிலங்களில் மலைக்கிராமங்களை ஒட்டியுள்ள வனப்பகுதியில் இருந்து காட்டுப்பன்றிகள் வந்து தின்றும், மிதித்தும் நாசப்படுத்தி விடுவது உண்டு.

## பரண் அமைத்து தீவிர கண்காணிப்பு

இந்த நிலையில் கடந்த ஆகஸ்டு, செப்டம்பர் மாதங்களில் பயிரிடப்பட்ட ராகி மற்றும் மக்காச்சோள பயிர்கள் நன்றாக வளர்ந்து உள்ளன. நன்றாக வளர்ந்து உள்ள பயிர்களை காட்டுப்பன்றிகள் தின்றுவிடக்கூடாது என்பதற்காக அந்த பகுதியை சேர்ந்த விவசாயிகள் தங்கள் விவசாய நிலங்களில் உள்ள மரங்களில் பரண் அமைத்து உள்ளனர்.

அதில் இருந்தவாறு இரவு நேரங்களில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். இதற்காக பரணில் அவர்கள் ஒரு 'தகர டப்பா' வைத்து அதனை தட்டி ஒலி எழுப்பி விவசாய நிலங்களுக்குள் நுழையும் காட்டுப்பன்றிகளை விரட்டி வருகிறார்கள். அவ்வாறு மரத்தில் உள்ள பரணில் இருந்தவாறு காட்டுப்பன்றிகளை விரட்டி, பயிர்களை காப்பதுடன் தங்களை காட்டுப்பன்றி தாக்குதலில் இருந்து

காத்துக்கொள்ளவும் முடிகிறது என்று தாளவாடி பகுதியை சேர்ந்த விவசாயி ஒருவர் தெரிவித்தார். கடந்த 2 மாதங்களுக்கு முன்பு தன்னுடைய விவசாய நிலத்தில் பயிரிடப்பட்டு உள்ள பயிரை பாதுகாக்க சென்ற மல்குத்திபுரம்தொட்டி பகுதியை சேர்ந்த துரைசாமி என்ற விவசாயி, காட்டுப்பன்றிகள் தாக்கி இறந்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## இயற்கை சாயமுறையில் பட்டு–கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி பணி ரூ.3 கோடிக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் கொள்முதல்



நம்பியூர்

இயற்கை சாயமுறையில் பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை ரூ.3 கோடிக்கு கொள்முதல் செய்ய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ‘ஆர்டர்’ கொடுத்ததை தொடர்ந்து சாவக்கட்டுப்பாளையம் நெசவாளர்கள் நெசவு பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார்கள்.

<u>அறிமுகம்</u>

ஈரோடு மாவட்டம் நம்பியூர் அருகே உள்ள சாவக்கட்டுப்பாளையத்தில் முக்கிய தொழிலாக கைத்தறி நெசவுத்தொழில் உள்ளது. இங்கு 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடும்பத்தினர் பட்டு மற்றும் கைத்தறி சேலை

நெசவு உற்பத்தியில் ஈடுபட்டு வருகிறார்கள். அடுத்த மாதம் (நவம்பர்) 10–ந் தேதி தீபாவளி பண்டிகை வருவதையொட்டி கைத்தறி பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை உற்பத்தி செய்யும் பணியில் இங்குள்ள நெசவாளர்கள் ஈடுபட்டு வருகிறார்கள். இந்த ஆண்டின் புதிய வரவாக பழம், பூக்களை கொண்டு இயற்கை சாயமுறையிலான பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது.

<u>ரூ.3 கோடிக்கு கொள்முதல்</u>

இந்த பட்டுக்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பும், மவுசும் ஏற்பட்டு உள்ளது. எனவே இந்த வகையான சேலைகளை தங்களுடைய ஷோரூம் மூலம் விற்பனை செய்ய தமிழக அரசின் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் முடிவு செய்தது.

இதனைத்தொடர்ந்து இங்குள்ள சாவக்கட்டுப்பாளையம் டாக்டர் எம்.ஜி.ஆர். பருத்தி மற்றும் பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் மூலம் அதன் உறுப்பினர்கள் நெசவு செய்து கொடுக்கும் இயற்கை சாயமுறையிலான புதிய பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை ரூ.3 கோடிக்கு கொள்முதல் செய்ய கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் உத்தரவிட்டது.

<u>மகிழ்ச்சி</u>

இந்த சங்கத்தின் மூலம் இதுவரை ரூ.2 கோடிக்கு பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு ஏற்கனவே வழங்கப்பட்டு விட்டது. தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த ஆண்டு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.1½ கோடிக்குத்தான் சேலைகளை கொள்முதல் செய்து இருந்தது. ஆனால் கடந்த ஆண்டை காட்டிலும் இந்த ஆண்டு ரூ.3 கோடிக்கு பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை கொள்முதல் செய்ய கோ–

ஆப்டெக்ஸ் நிறுவனம் முடிவு செய்ததால் இங்குள்ள நெசவாளர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

நல்ல வரவேற்பு

இதுகுறித்து சாவக்கட்டுப்பாளையம் டாக்டர் எம்.ஜி.ஆர். பருத்தி மற்றும் பட்டு நெசவாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க தலைவர் எஸ்.பி.கோவிந்தராஜ் கூறியதாவது:–

எங்கள் சங்கத்தின் மூலம் ஆண்டுதோறும் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்துக்கு சுமார் ரூ.4 கோடி மதிப்பிலான பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட்டு வருகிறது. இதில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு கடந்த ஆண்டு ரூ.1½ கோடிக்கு கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் எங்கள் சங்கத்திடம் இருந்து பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை கொள்முதல் செய்து இருந்தது.

இந்த ஆண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு இயற்கை சாயமுறையிலான பட்டு மற்றும் கோரா காட்டன் சேலைகளை எங்கள் சங்கம் அறிமுகப்படுத்தியது. இதற்கு பொதுமக்களிடம் நல்ல வரவேற்பு இருந்ததை தொடர்ந்து கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் ரூ.3 கோடிக்கு இந்த வகையான சேலைகளை கொள்முதல் செய்ய ‘ஆர்டர்’ கொடுத்து உள்ளது. இதனால் எங்கள் சங்க உறுப்பினர்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் தீவிரமாக நெசவுத்தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## கன்னியாகுமரி அருகே மேலடுக்கில் சுழற்சி; தமிழ்நாட்டில் சில இடங்களில் இன்று மழை பெய்யும்; வானிலை மையம் அறிவிப்பு



சென்னை,

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழை சராசரியாக அக்டோபர் மாதம் 20-ந்தேதி தொடங்கும் நிலை உள்ளது. அதாவது 20-ந்தேதிக்கு சில நாட்கள் முன்பு தொடங்கலாம் அல்லது சில நாட்கள் பின்னர் தொடங்கலாம். சராசரியாக தொடங்கும் நாள் இந்த வருடம் தள்ளி போக வாய்ப்பு இருக்கிறது. வடகிழக்கு பருவமழை தொடங்கி விட்டது என்றால் கடலோர மாவட்டங்களில் தொடர்ந்து அநேக இடங்களில் மழை பெய்யும். அப்படி இதுவரை எந்த அறிகுறியும் தெரியவில்லை. எனவே இந்த வருடம் 20-ந்தேதிக்கு பின்னர் வடகிழக்கு பருவமழை தொடங்க வாய்ப்பு உள்ளது.இந்தநிலையில் இன்று தமிழ்நாடு முழுவதும் சில இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது. இது குறித்து சென்னை வானிலை ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறுகையில் கன்னியாகுமரி அருகே மேலடுக்கில் சுழற்சி உள்ளது. இதன் காரணமாக தென் மாவட்டங்களில் சில இடங்களில் இன்று(திங்கட்கிழமை) மழைபெய்யும். ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது. வடமாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று மழை பெய்யும் என்றார்.